பொறி - 2

# சிறுபொறி

கல்வி மேம்பாடு புதியதளம் அமைக்கும்

மாணவர் இதழ்

2023 கார்த்திகை 27




கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக பாவனைக்குரியது ·

**சிறுபொறி**
**மாணவர் சஞ்சிகை**
**காலாண்டு இதழ் 2023**

**பிரதம ஆசிரியர்**
ந .இரவீந்திரன்

**ஆசிரியர் குழு**
திருமதி .சுலபாமதி கணேசமூர்த்தி
திரு . நவரத்தினம் இரவிவண்ணன்
திருமதி. ராணி சீதரன்
திரு .சுதாகரன் பொன்னுத்துரை
திரு. பரமானந்தர் மதனகோபாலன்
திருமதி. பங்கயற்செல்வி யோகநாதன்

**ஆலோசகர்**
திரு. சோ. தேவராஜா
திருமதி. வள்ளியம்மை சுப்பிரமணியம்

**மின்னஞ்சல்**
*sathiamanai.library@gmail.com*

**இணையதளம்**
*sathiamanai.blogspot.com*

**தொலைபேசி**
*+94750555333*
*+94212251798*
*+94212251737*
*+94757670149*

கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்
பதிவு. இல. - VW/FN/BR/1/38/2022
சுழிபுரம் - 40230
இலங்கை

**பொறி**
*02*

**ஆண்டு**
*2023 கார்த்திகை*

**பக்க வடிவமைப்பு**
அம்சா பாலகிருஷ்ணன்

**அச்சகம்**
*J.S அச்சகம் சில்லாலை*

**தொடர்பு முகவரி**
கே . ஏ. சுப்பிரமணியம் சத்தியமனை நூலகம்,
*(Reg No : VW/FIN/BR/1/38/2022)*

*724A, தொல்புரம் மேற்கு, சுழிபுரம் 40230*

**விலை 250/=**

## உள்ளே....

* கட்டுரைகள்
* கலை
* மொழி
* கணனி
* கவிதைகள்
* வினைத்திறன்
* விஞ்ஞானம்
* கணிதம்
* சித்திரத்தொடர்
* நாவல்கள்
* கதைகள்
* பொது அறிவு
* குறுக்கெழுத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே உலகை ஆளுகிறது!

**"பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக வழக்கு"** என்ற இலக்கண வகுப்புடைய மரபு எமக்கானது; இன்னமும் பழமைச் சகதியில் அழுந்தியவாறு, கண்ணில் கண்டது அனைத்தையும் அனுபவிக்கத் துடிக்கும் சிறுமைக் குணத்துடன் 'படி, படி' எனத் துரத்தியபடி எம்மைத் திக்குமுக்காட வைக்கும் சமூக நியதிகளின் அழுத்தங்களைத் தாங்கியவாறு தான் புதிய வாழ்வை நாடும் மாணவர்கள் நாம் கல்விக் கடலில் முத்தெடுக்க முயல்கிறோம்!

பழமைப் பாரம்பரியங்களைக் கண்மூடித்தனமாகப் போற்றவும் மேலாதிக்க ஒடுக்குமுறையாளருக்குத் துதி பாடவும் வழிப்படுத்துகிற வகையிலேயே இன்றைய உலகின் கல்வி கட்டமைக்கப்பட்டுள்ளது; அதனொரு வெளிப்பாடு நம்மவர் சிலரது இஸ்ரேல் ஆதரவு; தமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கப் போராடுகின்ற பலஸ்தீன மக்களை மனிதப் பண்பற்றுக் கொன்றொழித்தபடி உள்ள இஸ்ரேலை எந்த நியாயத் தராசில் வைத்து இவர்கள் ஆதரிப்பர்?

இன்று மட்டுமல்ல, அரை நூற்றாண்டுக்கு முன்னரே 'யூதர்கள் தனிநாட்டைக் கட்டமைத்ததைப் போல நாமும் நமக்கான நாடொன்றை வென்றெடுப்போம்' என்பதாகத் தான் அன்றைய எமது புகழ்பெற்ற தலைவர்கள் பலரும் குரல் கொடுத்தனர். 'யூதர்கள் அறிவுத் திறன் மிக்கவர்கள், நாமும் அறிவில் மேம்பட்டவர்கள் என்பதாலேயே கல்வியில் முன்னிலை பெற்று நாடு பூராவும் உயர் தொழில்களில் காலூன்றி இருந்தோம்' என்ற ஒப்பீடு அன்றைய மேலாதிக்க மனப்பாங்காளர்களின் எண்ணப்பாங்கு!

அந்த அறிவுப் பெருக்கு அர்த்தமுள்ளதாக இருந்திருப்பின் நாடு பூராவும் எமக்கானதாக இருந்துவந்த உயர் தொழில் வாய்ப்பு அற்றுப்போக வைக்கப்பட்ட போது, எமது பிரதேசங்களின் வளப்பெருக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அந்த அறிவைப் பிரயோகிக்க முற்பட்டிருக்க வேண்டும்.

வரலாற்றுக் காரணங்களால் எமக்குப் பிரித்தானிய ஏகாதிபத்தியம் வழங்கிய கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட நெருக்கடியை முகங்கொண்டபோது மாற்று வழியை நாடாமல் அவசியமற்ற போரில் ஒரு தரப்பு இறங்கியது. மக்களில் பலர் அதனை வாய்ப்பாக்கியவர்களாக எம்மை ஒடுக்கும் அதே ஏகாதிபத்திய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். ஏகாதிபத்திய நலன்களோடு ஒட்டியுறவாடும் சிலரே மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முற்படும் இஸ்ரேலின் யுத்தவெறியை ஆதரிப்பவர்களாய் உள்ளனர்.

அறிவை விருத்தி செய்யும் வாய்ப்பு வரலாற்றுக் காரணிகளால் யூதர்களுக்கு சாதகமாக இருந்தது; அதன் ஆற்றல் இன்றைய அவர்களது மேலாதிக்க இருப்பு. அவர்களது இத்தகைய வாய்ப்பைத் தனக்குரியதாக ஆக்கும் வகையிலேயே ஏகாதிபத்தியத்தின் நிர்ணயிப்பாக இஸ்ரேல் எனும் தேசம் பலஸ்தீன மண்ணில் உருவாக்கப்பட்டது.

மேலாதிக்கத்துக்கு மட்டுமன்றி விடுதலைச் சக்திகளுக்கும் வலுவான ஆயுதமாக அறிவு வந்தமையும். மக்கள் மீது திணிக்கப்படும் யுத்தவெறியை முறியடிக்க ஏற்ற விஞ்ஞான - தொழில்நுட்ப அறிவை மக்கள் விடுதலைப் போராளிகளும் விருத்தி செய்வர்; மட்டுமன்றி, அனைத்துவகை மேலாதிக்க ஒடுக்குமுறைகளையும் தகர்க்கும் விடுதலைத் தேசியச் சுயநிர்ணய உரிமைப் போராட்ட மார்க்கத்துக்கான சரியான திசைமுகப்படுத்தலையும் அறிவு வழங்கும்! மாணவர்கள் நாம் கற்பதற்கான எமது உரிமையைப் பாதுகாத்தவாறு, எமது முன்னோர்கள் இழைத்த தவறுகளைக் களைந்து, மக்களுக்கு அவசியப்படும் அறிவாற்றல்களையும் தேடுபவர்களாக வளர்வோம்!



ஏகாதிபத்தியப் பிணைப்புகளை முற்றாகத் தகர்க்கும் விடுதலைத் தேசியங்கள் தமக்கிடையே சமத்துவம் ஏற்படுத்த வலியுறுத்தும் கருத்தியலை விருத்தி செய்வோம்!

**கெட்ட போரிடும் உலகைச் சாய்ப்போம்; பொதுமைப் புத்துலகம் படைப்போம்!**

ஆசிரியர் குழு

*27-11-2023*

கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் இலக்கியம்

பபி ரவி

என் வாசிப்புகள் மிகச் சிறிய வயதிலேயே ஆரம்பித்துவிட்டன. அப்பா முழு நேரக் கட்சி ஊழியர். அம்மா ஆசிரியர். பாடசாலை முடிந்த மிகுதி நேரங்கள் வீட்டில் தான் இருக்க வேண்டிய சூழல். அப்பாவிற்கு அரசியல் நெருக்கடியால் தலைமறைவு வாழ்வு அடிக்கடி வரும். கிராமத்தில் குச்சு ஒழுங்கைகள் தேடி வீடு வாடகைக்கு எடுப்பார்கள். என்னுடன் சேர்ந்து விளையாட, சேர்ந்து படிக்க ஒரு அண்ணாவும், ஒரு தம்பியும் மட்டும் தான். நண்பர்கள் இல்லை.

வீடு முழுவதும் நூல்கள் நிறைந்திருக்கும். "தாமரை, கணையாழி, செம்மலர்" எனச் சிற்றிதழ்களும், ரஷிய, சீன மொழிபெயர்ப்பு நூல்களும், மார்க்சிய ஆங்கில நூல்களும் இருக்கும். அநேகமானவை சிவப்பு அட்டை சீனப் புத்தகங்கள்.

உலக வரைபடப் புத்தகத்தில், சிறு வயதிலே பல நாடுகளை இனம் கண்டு பிடிக்கவும், சில நாடுகளைக் கீறவும் எமக்குத் தெரிந்திருந்தது. அந்த நேரத்தில் வியட்நாம் யுத்தம் பற்றி தாமரையில் வாசித்த செய்தியை (வியட்னாம் யுத்தம் பற்றிய புகைப்படத் தொகுப்பு எம் வீட்டில் இருந்தது). திரைப்படம் போல எனது அண்ணா அதனை ஓட்டுவார். அப்படியான பல மேதாவித் தனங்களை என் அண்ணர் செய்வார். அப்போ அவருக்கும் பத்து வயசு தான் இருக்கும்.

சிற்றிதழ்களில் இருந்த துணுக்குகள் தான் என் முதல் வாசிப்பாக அமைந்தன. பிரதானமாக பெனாட்ஷோ அவர்களதும், முல்லா கதைகளும் அடங்கும். பின் படிப்படியாக வல்லிக்கண்ணன், அப்பாஸ், ஜெயகாந்தன் கதைகள் என ஆரம்பித்து, மார்க்சிம் கார்க்கியின் "தாய்", ஒஸ்திரோவ்ஸ்கியின் "வீரம் விளைந்தது" எனத் தொடர்ந்தன. இந்த வாசிப்பிற்கு பிரதான காரணம் என் தந்தை. தினமும் என்ன வாசித்தீர்கள்? சொல்லுங்கள் என்பார். இதன் பின்னரே எனக்கு கல்கி, அகிலன், காண்டேகர் எனத் தெரிய வந்தனர். என் சூழல் என் வயதிற்கானதாக இருக்கவில்லை.

என் வாசிப்பு தவிர்க்கமுடியாமல் என்னை இழுத்துச் சென்றது.

அதில் நன்மையும் உண்டு. நான் அம்புலி மாமா கதைகள் வாசித்ததில்லை. என் தாய் விக்கிரமாதித்தன், மஹாபாரதம், இராமாயணம் கதைகள் சொல்லுவார். நொடிகள் கேட்பார். அதே நேரம், சி ஏ பாலனின் தூக்குமர நிழலில் கதையும் சொல்வார்.

செம்மலர் இதழை ஆரம்பிக்கும் போது சின்னப்ப பாரதி புதிய இதழுக்கான அவசியம் பற்றி சொன்னதை என் அண்ணா, அவரது கையெழுத்துப் பத்திரிகையான "சிறுபொறி" ஆரம்ப நாள் அன்று மேற்கோள் காட்டி அதனைப் பேசினார். அதே போன்று ஒரு சூழலில் இன்று ஓர் "சிறுவர்களுக்கான இலக்கியம்" அவசியப்படுகிறது. சிறுவர் இலக்கியமா? அப்படி ஒன்று இருக்கிறதா நம்மிடையே? சிறுவர்கள் வாசிக்கின்றார்களா? அவர்களுக்கு என்றே யாரேனும் எழுதுகின்றார்களா? முதலில் சிறுவர் இலக்கியம் என்று கூறுவது எதனை? மானுட நாகரிகத்தின் ஆரம்ப காலத்திற்கு முற்பட்ட காலம் தொட்டு பிள்ளைகளுக்குக் கதை சொல்லுதல், அவர்கள் கதைகளைக் கேட்பதற்கு வழியமைத்துக் கொடுத்தல், நாடகமாக நடித்துக் காட்டுதல், என்பன இடம் பெற்றன.

கைத்தொழில் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட அச்சுத்தொழில் உள்ளிட்ட, பலதரப்பட்ட துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக, அதுவரை குடும்பச் சூழலுடன் கிடைக்கப்பெற்ற இவ்வாறான இரசனைகள் சமூகம், நாடு என அதற்கு அப்பால் உலக அளவிலும் சிறுவர்களை வந்தடைந்தன.

இதன்படி இற்றைக்குப் பல நூற்றாண்டுகளாக பிள்ளைகளுக்கான பல்வேறு இலக்கியப்படைப்புக்கள் பாரியளவில் வர்த்தக ரீதியாக உலகை எட்டியுள்ளன.

இவற்றுள் சிறுவர் கதைப் புத்தகங்களுக்கு மிகவும் முக்கிய இடம் கிடைத்துள்ளது. இரசனையையும் மொழிப் புலமையையும் ஏற்படுத்துவதற்காக மேலதிக வாசிப்பு நூல்களாகப் பயன்படுத்துவதற்கு சிறுவர் இலக்கிய நூல்கள் உருவாகின.

ஏழு வயது வரையிலானோர்க்கான இலக்கியத்தைக் குழந்தை இலக்கியம் என்றும் அதற்கும் அதிகமான வயதினருக்கானதைச் சிறுவர் இலக்கியம் என்றும் வகைப்படுத்துகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வகையினருக்குமான தேவை, வடிவம், களம், மொழி ஆகியவை நுட்பமாக மாறுபடும். ஆனாலும் பொதுவாக இவை இரண்டும் சிறுவர் இலக்கியம் என்றே கூறப்படுகின்றன . அச்சு, ஊடகம் பிரபலமான பின்னர் மேற்கில் இருந்து தான் சிறுவர் இலக்கியம் என்ற தனிப்பிரிவு வந்தது எனலாம். அதற்கு முன்னர் சிறுவர்க்குப் பெரியவர்களுக்கு என்ற பிரிவு கிடையாது. எம் நாட்டை பொறுத்தவரை ஆறுமுகநாவலர் காலத்துக்குப் பின்னரே தமிழ் நூல் வடிவம் பெறத் தொடங்கியது.

நிலவினைக் காட்டிச் சோறு ஊட்டுவது போன்ற பாடல். அகநானூற்றில் கொற்றங்கொற்றனாரிடம் (54வது பாடல்) தாலாட்டு பாடல் என்றே கூறுகின்றனர். பின் 'விடுகதை' வடிவத்தில் தொல்காப்பியத்தில் இருக்கின்றது என்கின்றனர்... இது 'பிசி' என்று அழைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் காலத்தில் கற்பனையாக விலங்குகளும் கதாபாத்திரங்கள் ஆகின்றன.

பின் ஔவையாரின் ஆத்திச்சூடி இன்றுவரை எம் முதல் சிறுவர் கவிதை என இருக்கிறது. சிறுவர்களுக்கான எழுத்து அதிவீரராம பாண்டியர் எழுதிய 'வெற்றிவேற்கை' "எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்" "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே" ஆகிய புகழ்பெற்ற வரிகள் இவர் எழுதியவையே. இந்த நீதிகள் சிறுவர்களுக்காகக் கூறப்பட்டவையே.

**செய்யுள்கள் -**செய்யுள் மூலம் தான் வரலாறு, மருத்துவம், வாழ்கை முறை, திருக்குறள், ஆத்திசூடி, தேவாரங்கள், நீதிநெறிகள் நமக்கு வழிவழியாகக் கடத்தப்பட்டன.



**சிறுவர் கதைகள்-** கதைகளுக்கு நம்மிடையே பஞ்சமே இருந்ததில்லை. கதை என்றால் எந்த வயதினருக்கும் பிடித்துவிடும். ஒரு கதை சொல்கிறேன் என ஆரம்பித்தால் எந்த வயதினரும் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். அம்மா, அப்பா கதை சொல்லி இடையில் நிறுத்தினால், எப்போ வந்து தொடருவார் என ஆவலுடன் காத்திருப்போம். அது ஒரு யுக்தியாக பின் சிறுவர் தொடர்கதைகள் ஆரம்பித்திருக்கலாம்.

தொடர்கதைகளாக வெளிவந்த பல கதைகள் நாவல்களாகப் பின்னர் வெளியிடப்பட்டன.

**சிறுவர் நாடகம் -** சிறுவர் நாடகமும் சிறுவர் அரங்கும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. சிறுவர் நாடகமென்பது சிறுவர்களை, அவர்களின் வயது உளநிலை அனுபவ எல்லை விருப்புவெறுப்புக்கள் என அணுகி, சிறுவர்களுக்கேற்ற கதைப்பொருளில், சிறுவர்களை இலக்குப்பார்ப்போர் எனக்கொண்டு சிறுவர்களாலோ அன்றில் சிறுவர்களை நன்கு புரிந்து கொண்ட பெரியவர்களாலோ எழுதப்படுகின்ற நாடகங்களாகும்.

**சிறுவர் பாடல்கள் -** இசைப் பாடல்களில் சிறுவர் பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அப்பாடல்களின் வழியாகச் சிறுவர்களுக்கு நல்ல பொறுப்பு உணர்வையும், இசை ஆர்வத்தையும் ஏற்படுத்தலாம்.

குழந்தைகள் எதைப் படிக்க வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் பெற்றோர்களின் போக்கில் அது தங்கி உள்ளது. இன, மத, சாதி, பாலின வேறுபாடுகள் களையப்படவேண்டும். மேற்கில் நிற வேறுபாடுகள் இல்லாதொழிக்கும் பொருட்டு பல சிறுவர் இலக்கியம் வந்து கொண்டிருக்கிறது. குழந்தைகள் சகஜமாக பழக ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

நீதி உரைக்கும் தோரணையிலோ, அல்லது போதனை செய்யும் எண்ணத்துடனோ இதைச் செய்யாமல் நயமாக, அவர்களது நியாயவுணர்வை, அறவுணர்வைத் தட்டி எழுப்பும் வகையில் இதைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்கருஎப்போதும் அக, புற ஒழுக்கத்தைப் பற்றி பேசுவது குழந்தைகளின் நல் வளர்ச்சிக்கு உதவும்.

நாம் சிறு வயதில் கேட்டு வளர்ந்த **"Tommy Tommy Yes Pappa..."** பாடலில் வரும் **"Telling lies."** என்பது *"Are you Sure?"* ஆகவே மேலை நாடுகளில் பழக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பொய் என்பதை ஊக்குவிக்க கூடாது என்பதைக் கவனிப்பது அவசியம்.

சிறுவர் நூலொன்றில் உருவப்படமானது விளக்கமாக இருப்பதால் சிறுவர்களுக்கு பரந்த ஓர் உலகம் திறந்து விடப்படுவதுடன் அது அதிகம் வெற்றியளிக்கிறது. ஆக்கத்தின்போது ஓவியங்களின் வெற்றி கருதி கதைக்கு ஏற்ற வகையில் சித்திரத்தினூடாக உணர்வுகள் வெளிப்படுத்தப் பட்டிருத்தல் மிகவும் முக்கியமானது. அவ்வாறான சித்திரங்கள் பிள்ளைகளின் உள்ளத்தை தொட்டுச் செல்ல வல்லது. கதையின் ஏற்றம், கதையின் இறக்கம், கதையின் நகர்வு (நிகழ்வு), முடிவு, அதில் இருந்திட்ட சிக்கல்கள், பிணக்குகள் தீர்க்கப்பட்டு முடிக்கப் பட வேண்டும்.

**வாசிக்க வேண்டிய சிறுவர் இலக்கிய நூல்கள்:**

1.அந்தோணியின் ஆட்டுக்குட்டி-கமலவேலன்.

2.ரயிலின் கதை-பெ.நா.அப்புஸ்வாமி.

3.சிறுவர் கலைக்களஞ்சியம் – பெ.தூரன்.

4.எங்கிருந்தோ வந்தான் – கோ.மா. கோதண்டம்.

5.நல்ல நண்பர்கள் – அழ.வள்ளியப்பா.

6.நெருப்புக்கோட்டை- வாண்டுமாமா.

7.வாசித்தாலும் வாசித்தாலும் தீராது–பேராஎஸ். சிவதாஸ்.

8.ஆயிஷா – இரா.நடராசன்.

9.குட்டி இளவரசன் – அந்துவான் எக்சுபரி – வெ.ஸ்ரீராம்.

10.சிறுவர் நாடோடிக்கதைகள் – கி.ராஜநாராயணன்.



## புகை எல்லோர்க்கும் பகை

பணத்தைக் கொடுத்துப் பெரும் நோயை
விலைக்கு வாங்கும் விலை மதிப்பற்ற
மானுடனே!
மாண்டு விட்டதா உன் புத்தி ?
நுரையீரலை கரியாக்கி -உனது
உயிர் புசிக்கும் அரக்கனை நீ
புகைக்கும் முன் கொஞ்சம் யோசி
இதய நோயும் சுவாச நோயும் பற்பல
நோய்கள் உன்னைச் சூழ்ந்து வதைத்து
இளவயதில் உன் உயிரை மாய்க்கிறதே
இன்னும் ஏன் அதை நீ உணர மறுக்கிறாய்
புகையால் ஆளுமையை இழக்கிறாய் -உன்
ஆயுளையும் குறைக்கிறாய் -அது மட்டுமா
அடுத்தவன் நன் மதிப்பையும் இழக்கிறாய்
அட்டூழியங்களும் வகை வகையாய் புரிகின்றாய்
ஏழை மக்களின் வயிற்றில் அடித்து
அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை
ஏற்றுகின்ற அரசாங்கம் அரக்கத்தன்மையாய்
மனித உயிர் குடிக்கும் போதைப் பொருட்களை
ஏன் மலிவாக கிடைக்கச்செய்கின்றது
உயிர்காக்கும் மருந்துகளுக்கே தட்டுப்பாடு
ஒரு மரத்தைத் தறிப்பதற்கும் கட்டுப்பாடு
-ஆனால்
உயிர் குடிக்கும் மதுவிற்கு விளம்பரங்கள்
ஊடகங்கள் அனைத்திலும் பிரச்சாரங்கள்
எவருக்கும் அடிமையாகாமல் சுதந்திர வாழ்வு
வாழ
எண்ணுகின்ற இளைஞனே! நீ மதுவுக்கு
அடிமையாகி
ஏமார்ந்து போவதேனோ ? எதிர்கால தலைவனே !
புகைத்தலை எதிர்த்து நீயும் புற்றுநோயை
தவிர்த்திடுவாய்.

அ .அபிஷா(தரம் -11)
யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்

**சிந்திக்க சில நேரம் ...**

**1. ஒருவர் கடற்கரை வழியே சென்று கொண்டிருக்கிறார் அவர் செல்லும் போது அவரின் வலது பக்கம் சூரியன் மறைந்தது அப்போது அவர் சென்ற திசை?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி நிலை

மாணவர்கள் பாடசாலைக்கல்வியை தமது தாய்மொழிகளில் கற்றுத் தேர்ச்சியடைந்த பின்னர் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் தமது பட்டப்படிப்பைக் கட்டாயம் ஆங்கில மொழியில் தொடரவேண்டும் என்ற நிலை ஏற்படுவதனால் கற்றலை சுமூகமாகவும் போதிய விளக்கத்துடனும் பெற்றுக்கொள்வதென்பது பாரிய ஓர் பிரச்சனையாகும்.

இதற்கு பிரதான காரணம் அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில மொழியை ஊடகமாக கொண்ட கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை ஆகும்.

பொதுவான எமது கற்றல் முறைமையானது எதிர்கால கல்வியோடு பொருத்தப்பாடுடையதாக அமையவில்லை. எமது கல்வி முறைமைவரையறுக்கப் பட்டப் பாடத்திட்டத்தோடு பரீட்சையை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது.

தற்காலத் தொழிநுட்பத்தோடு ஒன்றித்ததாகவோ அல்லது தொழிற்துறை சார்ந்ததாகவோ இல்லை. இதன் விளைவாகவே பட்டப்படிப்பின் பின்னரும் வேலை வாய்ப்பு என்பது பலருக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. கல்வியில் ஓர் நிறைவை அடைந்த பின்னரும் எதிர்காலம் கேள்விக்குறியாகின்ற போது வாழ்நாள் அரைப்பகுதி கற்றலுக்காக செலவிடப்பட்டது பிரியோசனமற்ற செயற்பாடகவே எண்ணத் தோன்றுகின்றது.

இன்று உலகளாவிய ரீதியில் கல்வி கற்கும் முறைமைகள் எமது கற்பனைக்கு அப்பாற்பட்ட அளவு மாற்றத்தை கண்டுள்ளது. திறன்பேசிகள், கணினிகள், மடிக்கணினிகள், இணையம், தொலைத்தொடர்பு சாதனங்கள், டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட எண்முறையான கற்றல் உபகரணங்கள் போன்ற பல்வேறுபட்ட விதங்களில் வளர்ச்சி கண்டுள்ள சர்வதேசக்கற்கை முறைமைகளோடு ஒப்பிடுமிடத்து, இலங்கை இன்று இருக்கின்ற நிலை மிகவும் பின்தங்கியே உள்ளது.

நாடொன்றின் பொருளாதாரத்தை விட கல்வியையே இக் கொரோனா பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது என்பதே நிகழ்காலத்தில் பலரின் கருத்தாக திகழ்கிறது. 20 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் சுமார் ஒன்றரை வருடத்துக்கும் மேலாக, *Online* மெய்நிகர் கற்பித்தலையே கற்று வருகின்றனர்.

ஆசிரியர்கள் காய்கறி வெட்டிக் கொண்டே கற்பிப்பதும், மாணவர்கள் *Mute* செய்துவிட்டு *Game* விளையாடுவதையும், ஒரு *New Normal* ஆக எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் *Google Form* இல் பரீட்சை நடத்துவதை எவ்வகைப்படுத்துவது?.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால் அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இருக்குமா? ஒரு மொபைல் அல்லது கணனி இருக்கும் வீட்டில் இரண்டுக்கு மேற்பட்ட சிறார்கள் இருக்கும் பட்சத்தில், இருவரும் எவ்வாறு கல்வி கற்க முடியும்? போன்ற கேள்விகள், இன்னும் விடையில்லாக் கேள்விகளாகவே விளங்குகின்றன.

பெட்டிக் கடைகளுக்கு அடுத்த படியாக பட்டப்படிப்பு வழங்கும் தனியார் நிறுவனங்களே அதிகமாக காணப்படுகின்றது. பத்திரிகை முதல் முகப்புத்தகம் வரை எதை திறந்தாலும் பட்டப்படிப்பு தொடர்பான மண்டைசலவையே நடைபெறுகின்றது. இது போன்ற தனியார் கல்வி நிறுவனங்களின் வருகையை இரு திசைகளிலும் விவாதிக்கலாம்.

எனினும் கல்வியின் தரம் பாதிப்புக்குள்ளாகும் வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுமாயின், அதற்கு எவரும் கண்டிப்பாக உடன்படப் போவதில்லை பல இடங்களில் பல குறைபாடுகள் இருப்பினும், இலங்கையின் கல்வி முறைமை தனித்துவமானது, பல கல்விமான்களை உருவாக்கியது என்பதை நாம் அனைவரும் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் இக் கல்வி முறைமையில் நாமும் ஒரு பங்காய் விளங்கி,
**பொறுப்பு வாய்ந்த ஓர் குடிமகனாக மாற முயற்சிப்போம்!!**

**நிரஞ்சனா ராசா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மணி-

யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட முகமது சில வருடங்கள் புத்தளத்தில் வாழ்ந்து விட்டு மீண்டும் வந்து தனது வசிப்பிடமான பள்ளிவாசலுக்கு அருகாமையில் உள்ள தனது வீட்டில் வசிக்கத் தொடங்கினார், முகமது. மனைவி நூர்ஜஹானும், மகள் ஆமினாவும் படிப்புச் சம்பந்தமாக புத்தளத்தில் தங்கி விட்டனர். அங்குள்ள இறால் பண்ணை ஒன்றில் வேலை கிடைத்தால் அல்லது மீன்வாடியில் வேலை கிடைத்தால் தான் குடும்ப சீவியத்திற்கு பணம் தேட முடியும். என்ற நம்பிக்கையுடன் மீன்வாடியை நோக்கிச் சென்றான்.

ஏற்கனவே முகப்பழக்கமான சலீம், முகமதுவை கண்டதும் கட்டித்தழுவி தன்னுடனேயே தொழில் செய்யலாம் என நம்பிக்கையூட்டினார். மகன் முத்துமீரானைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதும் வீட்டில் சமைப்பதும், சலீமுடன் தொழிலுக்குப் போவதுமாக முகமதுவின் நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. புத்தளத்திலுள்ள தனது மனைவி, மகள் ஆகியோருக்கான செலவுக்கும் காசு அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் திடீரென சலீமுக்கு மாரடைப்பு ஏற்பட்டு விட்டது. அவரை ஆட்டோவில் ஏற்றி யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ற போது...... அவர் ஏற்கனவே இறந்து விட்டதாகக் கூறினார்கள். முகமதுவுக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. தனக்குத் தொழில் கொடுத்து சீவியத்துக்கு வழிகாட்டிய சலீமின் இழப்பு, அத்துடன் இரு பெண் குழந்தைகளுடன் "இனி எப்படிச் சீவிக்க போகிறோம்" என்று சலீமின் மனைவி கதறிய கதறல் கல்லு மனதையும் கரையும் வகையில் இருந்தது .

முகமது ஒரு முடிவு எடுத்துக் கொண்டார். 10ம் வகுப்புடன் மகனையும் பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தி தன்னுடன் தொழிலுக்கு அழைத்துச் சென்றார். கிடைத்த நேரங்களில் அயலிலுள்ள ஆசிரியர்கள் மூலம் அவனது கல்வியைத் தொடரப்பண்ணினார். சலீம் பாவித்த தோணி கரைவலை ஆகியவற்றையும் பாவித்து தொழிலையும் நடாத்தி சலீம் குடும்பச் செலவுக்கும் பண உதவி புரிந்து வந்தார். "அந்த அல்லாதான் உங்கள் வடிவில் வந்திருக்கிறார்." என்று கூறி நஸ்ரின் கண்ணீர் வடித்தார். முத்துமீரான் தனக்கு கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை சலீம் மனைவி நஸ்ரின் பெயரில் தபாற்கந்தோர் சேமிப்புக் கணக்கில் வாரந்தோறும் சேமிப்புச் செய்தார்.

படிப்பைப் பாதியில் நிறுத்திய முத்துமீரான் வெளிவாரியாகப் படித்து வந்த கல்வி மூலம் பல்கலைக்கழகம் சென்று பின் ஆசிரியரும் ஆனார். சேமிப்பில் இட்ட பணமும், அதன் மூலம் கிடைத்த வட்டிப் பணமும் சேர்த்து பத்து வருடங்களில் சேமிப்புப் புத்தகத்தில் 20 லட்சத்தைத் தாண்டிய நிலையில் அந்தப்புத்தகத்தை நஸ்ரின் கையில் ஒப்படைத்தார் முத்துமீரான். அதனைக் கண்ணீருடனும் நன்றியுடனும் நஸ்ரின் பெற்றுக்கொண்டார். தன் குடும்பத்திற்கு பலனை எதிர்பாராது உதவிய சலீம் போல முகமதுவும் மகனும் உதவி கேட்டு வருபவர்களுக்கு இல்லை [illegible]தவி செய்து வந்தனர்.

# முகமது வாப்பாவும் முத்துமீரான் மகனும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனீபா மசாரி

**-தஸ்மி பிரபா -**



வாழ்க்கை உங்களுக்கு எளிமையாக இருக்க வேண்டும் என்றால். அது உங்களுக்கு தேசிக்காயை மட்டும் கொடுக்கும்.

அதைக் கொண்டு நீங்கள் யூஸ் தயாரிக்க முடியும் என்பதை அறிந்து கொள்வது உங்கள் முயற்சி; அதை விடுத்து, நீங்கள் வாழ்க்கையை குறை கூறி பயனில்லை என்கிறார் முனீபா மசாரி.

இவர் ஒரு ஓவியர் , ஊக்குவிப்பு பேச்சாளர், சமூக ஆர்வலர், தொலைக்காட்சி தொகுப்பாளர். இத்தனையும் தாண்டி இவர் பாகிஸ்தானின் பெண்களுக்கான ஐ.நா.சபைத் தூதுவர். "வாழ்க்கையின் சுவையே போராடுவதுதான், போராடி அதை வெற்றி கொள்வது தான் அழகு" என்று முடங்கிக் கிடக்கும் பெண்களுக்கு முதுகில் தட்டிக் கொடுக்கிறார் பாகிஸ்தான் வீல்சேர் மொடலாகிய இந்த இரும்புப் பெண்.

18 வயதில் குடும்பத்தினர் விருப்பத்திற்கு அமைய திருமணம் செய்துகொண்டார். கணவருடன் செல்லும் போது கார் விபத்து. அவரோ தன்னை மட்டும் காத்துக் கொண்டார்.

பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முனீபா இனி வாழ்நாள் முழுவதும் வீல்சேரில் தான் இருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.மேலும் இவரால் தாயாக முடியாது என்ற தகவலை அறிந்த கணவன் வேறொரு திருமணம் செய்து கொண்டார் .

இதற்கு மேலும் உயிர் வாழ வேண்டுமா? என நினைத்து விரக்தியில் இருந்த மகளை ஊக்குவித்துக் கொண்டிருந்தார் இவரது அம்மா. இந்த "உலகத்தில் எத்தனையோ பிள்ளைகள் பெற்றோர் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பிள்ளை என்னை அம்மா என அழைக்கலாமே" என்று நினைத்தாலும் எல்லா வசதிகளும் உள்ளவர்களே தத்து எடுப்பதற்கு தயங்கும் போது உடல் , மனம் இரண்டிலும் பாதிப்படைந்த என்னால் முடியுமா? என்ற தயக்கமும் தோன்றியது. இருப்பினும் பிறந்து 2 நாட்களான ஆண் பிள்ளையை சட்ட ரீதியாக தத்தெடுத்துக் கொண்டார். இது தாய்மை உணர்வுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2014 நவம்பர் இல் TEDx நிகழ்ச்சியில் முனீபா ஆற்றிய ஊக்கமூட்டும் பேச்சு பொதுமக்கள் அனைவரையும் கவர்ந்தது.

அவரது பேச்சில் ஒரு நம்பிக்கையும் வாழ்க்கையை விட்டுவிடாதீர்கள் என்று மக்களை வலியுறுத்துவதும் ஆண், பெண் சமத்துவம் பேணல் என்ற கூற்றுக்களும் குறைகள் உடலில் இருந்தால் கூட மனம் நினைத்தால் குறைகளையும் நிறைகளாக்கலாம் என்ற எண்ணத்தை விதைப்பதாக அமைந்தன.

**முனீபாவின் தன்னம்பிக்கை ஊட்டும் சில வரிகள்**

- என்னுடைய கதை எப்படி முடியும் என்று எனக்கு தெரியாது .ஆனால் அதில் ஒரு முறை கூட "நான் தோற்றுவிட்டேன்" என்ற வாக்கியத்தை படிக்க முடியாது.
- எனக்குள்ளே இருக்கும் தீ என்னை சுற்றியுள்ள தீயை விட பிரகாசமாக இருப்பதால் தான் நான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
- உங்கள் மதிப்பையும் திறமைகளையும் சந்தேகிப்பவர்களுக்கு உங்கள் வெற்றியைச் சமர்ப்பியுங்கள் .
- உறுதி,தன்னம்பிக்கை,தைரியம் மற்றும் துணிவான குரல் கொண்ட எந்தப் பெண்ணும் அனைவரினதும் ரோல்மாடல் ஆகலாம்.
- எங்கு ஒரு சக்கரம் இருக்கிறதோ, அங்கே ஒரு வழி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம்

கணிதம் என்பது எண்களின் செயல்பாடு. ஆதிகால மனிதன் பொருட்களை,கால் நடைகளை முதன் முதலில் எண்ணிடக் கற்றான்.அதற்கு அவன் தனது விரல்களை மட்டும் பயன்படுத்தினான். பிறகு படிப்படியான நாகரிக வளர்ச்சியில் மொழி அறிவு ஏற்பட்டதும்.எண்களைக் கண்டான்.இது இடத்திற்கு இடம்,நாட்டிற்கு நாடு வேறுபட்டது. உலகத் தொடர்பு ஏற்பட்டு, உலக வணிகம் வளர வளர ஒரு பொதுவான எண் அமைப்பு உருவாகியது.

5 ஆம் நூற்றாண்டில், நன்கு அறியப்பட்ட கணிதவியலாளரும் வானவியலாளருமான ஆர்யபட்டா இந்தியாவில் பூஜ்ஜியத்தை அறிமுகப்படுத்தினார். முன்னதாக, பூஜ்ஜியமானது கணிதத்தில் புள்ளியாகக் குறிப்பிடப்பட்டது, பின்னர் அது அரபுக்கு வந்தபோது, இன்று நாம் '0' இலக்கமாக அறியும் வண்ணம் நீள்வட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

பூஜ்ஜியம் இந்து-அரேபிய எண் முறைக்கு சொந்தமானது என்பதற்கு இதுவே காரணம். ஆர்யபட்டருக்குப் பிறகு, பிரம்மபுத்திரா பூஜ்ஜியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது, 7 ஆம் நூற்றாண்டில், பிரம்மபுத்திரா கணித செயல்பாடுகளில் பூஜ்ஜியத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்.




இந்த எண்களைக் கொண்டு கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பது கணிதத்தின் அடிப்படையாகும். அறிவியல், வரலாறு, புவியியல், அரசியல் போன்ற அனைத்து பாடங்களுக்கும் கணிதம் இன்றியமையாதது.

பண்டைய இந்தியா, கணிதத்துறைக்கு வழங்கிய மற்றொரு முக்கியமான கண்டுபிடிப்பான பைனரி எண்கள் (இரும எண்கள்) நவீன உலகத்துடன் ஆழமான தொடர்பு கொண்டது. இந்த பைனரி எண்கள் நவீன கணிப்பீடுகள் மற்றும் கணினிகளின் அடிப்படையாகும்.

வணிகத்தில், எண்களுக்குஇடையான தொடர்பை அறிவதில், நிலத்தை அளப்பதில், அண்டவியல்நிகழ்வுகளை வருவதுரைப்பதில் மனிதனுக்கு இருந்த கணித்தலின் தேவைகள் காரணமாக எழுந்த ஓர் அறிவியல் பிரிவாகும். இந்த நான்கு பிரிவுகள்

**அளவு (*quantity*) – எண்கணிதம்**
**அமைப்பு (*structure*) – இயற்கணிதம்**
**பரவெளி (*space*) – வடிவவியல்**
**மாற்றம் (*change*) -நுண்கணிதம்**

செ. யதுர்ஷன்(தரம் 12)
யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி

### சிங்கம் ஏன் காட்டு ராஜா என்று அழைக்கப்படுகிறது ?

பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த சிங்கம் தான் மிகவும் புகழ் பெற்ற விலங்கு. ஆண் சிங்கம் காட்டு ராஜா என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அதன் கம்பீரமான நடையும் ராஜ அம்சத் தோற்றத்தையும் கொண்டிருப்பதால் இந்தப் பட்டம் சிங்கத்திற்கு கிடைத்தது. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த முழு வளர்ச்சி அடைந்த ஆண் சிங்கத்திற்கு மட்டும் தான் கழுத்து,தலையைச் சுற்றி கவர்ச்சியான பிடரி மயிர் உண்டு.இது சிங்கத்திற்குக் ராஜகம்பீரத்தை கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் மனிதனும்

**"ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீ அழுதாய் கண்மணியே கண்ணுறங்கு" என்று தாயானவள் தனது குழந்தையைத் தூங்க வைப்பதற்காகத் தாலாட்டுப் பாடல் பாடுகிறாள். குழந்தையும் அத் தாலாட்டுப் பாடலைக் கேட்டு தூங்குகிறது. இதற்கு காரணமாக இருப்பது இசை என்பதில் எவ்வித ஐயமுமில்லை.**

இப் பிரபஞ்சத்தில் மனிதர்களோடு தாவர, விலங்குகளும் உட்பட இசைக்கு அடிமையாகாத எவ் உயிரினமும் இல்லை என்றே கூறலாம். காரணம் இங்குள்ள ஒவ்வொரு உயிருக்குள்ளும் இசை உள்ளது.

குழந்தை பிறந்ததிலிருந்து பாடப்படும் தாலாட்டுப் பாடலில் இருந்து, இறந்த பிறகு பாடப்படும் ஒப்பாரிப் பாடல் என மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை இசையுடன் வாழ்கிறான் என்றால் மிகையாகாது.

இன்று மனிதர்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொருவரும் தங்கள் காதுகளில் ஹெட்செட்டை அணிந்தவாறு பாடல்களை கேட்ட வண்ணம் உள்ளார்கள். அத்தோடு இன்றைய மாணவர்களும் தங்களது கல்வி சார்ந்த விடயங்களை ஞாபகப்படுத்தி வைத்திருப்பதை விட இசையுடனான பாடல்களையே அதிகமாக ஞாபகப்படுத்திக் கொள்கிறார்கள்.

மற்றும் வேலைகள் செய்யும் போதும், தூரப் பயணங்கள் செய்யும் போதும், நடந்து செல்கின்ற போதும் பாடல்களைக் கேட்ட வண்ணம் அல்லது பாடல்களைப் பாடிய வண்ணமே இருக்கிறார்கள். இதற்கு காரணம் இசையானது எமது இதயத்தை ஆட்கொண்டுள்ளது என்பது தான்.

"இசையால் வசமாகா இதயம் எது.." என்ற பாடல் வரியின் மூலம் இசைக்கும் இதயத்திற்கும் உள்ள தொடர்பை அறியலாம். முறைப்படுத்தப்பட்ட ஓசை அல்லது ஒலியானது இசையாக உருவெடுத்து மனித மனங்களிலிருந்து வெளிவரும் போதும், இசைக்கருவிகள் மூலமாக வெளி வரும்போது பல விதமான இசைகளாக உருவாகி மனித மனங்களை ஆட்கொள்கின்றன.

இசையில் எத்தனையோ வகைகள் உள்ளன என்று கூறிக் கொண்டாலும் இசையின் அடிப்படை ஏழு ஸ்வரங்கள் மட்டுமே ஆகும். அந்த ஏழு ஸ்வரங்களும் தான் உலகில் இருந்து வெளிப்படும் அனைத்து இசைக்கும் அடிப்படை நாதங்களாகும்.

அத்தோடு எந்தப் பாடலைப் பாடும் போதும் அதற்கு முக்கிய காரணிகளாக ராகம், தாளம், சுருதி, குரல்வளம் என்பன உள்ளன; இவை நான்கும் சரிவர அமையும் போது தான் மிகச்சிறந்த இசையுடனான பாடல்கள் உருவாகின்றன.

மனிதனுடன் ஒன்றித்து உள்ள இசையானது மனிதனுக்கு நன்மைகளைக் கொடுக்கின்றது.

**இசையானது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் நோயற்ற வாழ்வு வாழ உதவுகின்றது,**

**இசையானது மனச்சோர்வின் அறிகுறிகளைக் குறைப்பதோடு மன அழுத்தத்தையும் கணிசமாகக் குறைக்கின்றது.**

**நாம் ரசித்துக் கேட்கும் மெல்லிய இசையானது ரத்த அழுத்தத்தைக் குறைக்கும், இதயத்துடிப்பைச் சீராக்கும் மற்றும் பதற்றம், கவலைகளைக் குறைக்கும் ஒரு மருந்தாக செயற்படுகின்றது.**

இவ்வாறு தெரிந்தும் தெரியாமலும் இசையானது மனிதனின் வாழ்வில் முக்கியமானதொன்றாகக காணப்படுகிறது.

இசை உடனான வாழ்க்கையும் ஆரோக்கியத்தைத் தரும்.



**கஸ்தூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்திலும், பின் யுத்தத்தின் வடுக்களோடும், வலிகளோடும் வாழும் நாம்; இன்று உலகை உலுக்கும் தொடர் உயிரிழப்புகளைப் பார்த்தபடியும், கேட்டபடியும் இருக்கிறோம்.

# இஸ்ரேல் - பாலஸ்தீனம் அங்கு என்னதான் பிரச்சனை?

கிறிஸ்தவர்கள் வரலாறு 2000 ஆண்டுகள் என்றால் யூதர்கள் வரலாறு அதற்கு 1500 வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கிறது, இயேசு கிறிஸ்துவே ஒரு யூதர்தான், ஆனால் யூதர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாமல் அவர்கள் தங்கள் கொள்கை மதத்திலேயே தொடர்ந்தனர். அந்தக் காலகட்டத்தில் ஜெருசலேம் ரோமானியப் பேரரசுவின் கட்டுபாட்டில் இருந்தது.

அப்போது ரோமில் திட்டவட்டமான மதம் கிடையாது, சிறுதெய்வ வழிபாடு இருந்தது, அப்போதைய ரோமானிய மன்னன் பெயர் காலிகுலா . இவன் தன் சிலையை வைத்து வணங்க வேண்டும் என்று உத்தரவு இட்டான்.

யூதர்களின் ஒரே கடவுள் என்ற கொள்கைக்கு எதிராக மன்னன் உத்தரவு இருந்ததால் அதை எதிர்த்துப் போராடி ஜெருசலேம் நகரைக் கைப்பற்றி கொண்டனர்.இதை அடக்க கிபி-70 ஆம் ஆண்டு ரோமானிய சக்ரவர்த்தியின் மகன் தலைமையில் வந்த படை கண்ணில் பட்ட யூதர்களை எல்லாம் கொன்று அவர்களின் புனித தேவாலயத்தை இடித்து விட்டனர். இன்றுவரை அந்த ஆலயம் கட்டப்படவில்லை,

இடிந்த ஆலயத்தின் எஞ்சிய ஒரு சுவரைத் தான் வணங்கி கொண்டு உள்ளனர். இந்த சம்பவத்திற்கு பின் யூதர்கள் ஜெருசலேமை விட்டு விரட்டப்பட்டனர், அதன் பின் அவர்கள் எகிப்து, சிரியா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வந்தனர்.

கிபி 1518ல் ஜெருசலேம் ஒட்டமான் பேரரசுக்குள் வந்தது. அதன் பின் கிபி 1918 வரை அவர்கள் கட்டுபாட்டில் இருந்தது, முதலாம் உலகபோரின் போது ஒட்டமான் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் யூதர்கள் குடியேறுவதைப் பிரித்தானியா ஊக்குவித்தது.

ஹிட்லர் ஆட்சியில் யூதர்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டனர். ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் அவர்கள் விரட்டப்பட்டனர், காரணம் யூதர்கள் எந்த துறையில் இருந்தாலும் கிடைக்கும் வாய்ப்புகளைத் தமக்கு சாதகமாக்கி பயன்படுத்தி, அவர்களே முன்னணியில் இருந்தனர்.

இரண்டாம் உலகப்போரின் போது அரேபியர்கள் ஹிட்லரை ஆதரித்தனர். யூதர்கள் இங்கிலாந்தை ஆதரித்தனர்,

போரின் முடிவில் இங்கிலாந்து வெற்றி பெற்றதால் அவர்கள் கட்டுபாட்டில் இருந்த தேசத்தை 1948ல் இரண்டாகப் பிரித்து யூதர்களுக்கென இஸ்ரேல் என்ற நாடு, அரேபியர்களுக்கு காசா மற்றும் மேற்குக்கரை பகுதி என்பனவற்றை உள்ளடக்கிய பாலஸ்தீனம் என்ற தேசத்தை உருவாக்கினர்.

ஜெருசலேம் யூதர், கிறிஸ்துவர், முஸ்லீம் என மூன்று சமயத்திற்கும் புனித நகரம் ஆனதால் யாருக்கும் கொடுக்காமல் ஐ.நா. சபையின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.உடனே சுற்றி உள்ள முஸ்லிம் நாடுகள் இஸ்ரேல் மீது படை எடுத்தன, ஆனாலும் யூதர்கள் வெற்றி பெற்றனர்.

இதனால் அரேபியர்கள் இஸ்ரேலுக்கு எதிராக யாசர் அராபத் (PLO) தலைமையில் கொரில்லா யுத்தம் நடாத்தி வந்தனர்.. நீண்ட காலம் நடைபெற்ற போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்காவின் ஏற்பாட்டில் - இஸ்ரேல், பாலஸ்தீனம் இடையே ஒஸ்லோவில் அமைதி பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டு, அதன் அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

**நல்லைநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாசர் அராபத் தலைமையில் பாலஸ்தீனம் அமைந்தது, அவர் ஒப்புக்கொண்டபடி அரேபியர்களின் போராட்டத்தை கட்டுபடுத்த முடியவில்லை; காரணம் காசா பகுதியில் ஹமாஸ் இயக்கம் வலுப்பெற்று, தொடர்ந்து யூதர்களுக்கு எதிராகப் போரிட்டது, இஸ்ரேல் பழையபடி தன் அத்துமீறிய குடியிருப்பைத் தொடர்ந்தது.

*1948ல் மே 14* அன்று இஸ்ரேல் நாடு(*State of Isrel Declare*) உருவாக்கப்பட்டது. ஜெருசலேம் சர்வதேச நகரமானது. காலப்போக்கில் இஸ்ரேல் - பாலஸ்தீனம் மோதலில் பிரிட்டன் தலையிடுவதை நிறுத்திக் கொண்டது.

*1964* இல் உருவாக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை அமைப்பு (*PLO*), எப்போதும் இரு நாடுகளின் தீர்வை எதிர்த்தது.

யூதர்கள் ஜெருசலேமில் சலோமன் கட்டிய கோவில் (இன்று அந்த கோவிலின் சுவர் மட்டுமே எஞ்சி உள்ள நிலையில்) இருப்பதால் அந்நகரை புனிதமாக கருதுகின்றனர். கிறிஸ்துவர்கள் இயேசு கிறிஸ்து இறுதிக் காலத்தில் வாழ்ந்த இடம் என்கின்றனர்.

முஸ்லீம்களுக்கு அங்கு மக்கா, மதீனாவை அடுத்து, அவர்களின் புனிதமான அல் அக்ஸா மசூதி இருப்பதால் அவர்களுக்கும் அது புனித இடமாக விளங்குகிறது.

காசா பகுதியில் இஸ்ரேல்-பாலஸ்தீனத்துக்கு இடையேயான ரத்தப் போர் ஆண்டாண்டு காலமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.




இருப்பினும், *1970*களின் மத்தியில் *PLO* தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு இரண்டு தேசங்களுக்கான ஆதரவைத் தெரிவித்தது. *1967*-இல் மத்திய கிழக்குப் போர் நடைபெற்றது. ஆறு நாள் நடந்த இப்போரில் கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றியது.

இதில் ஒருங்கிணைந்த ஜெருசலேமே தங்கள் தலைநகரமாக இருக்கும் என்று இஸ்ரேல் அறிவித்தது. இதற்கு பாலஸ்தீனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அந்தவகையில், ஜனநாயகப் போர்வைக்குள் மறைந்துறைந்த ஐரோப்பிய நாடுகளில் இனவெறுப்புக் கொடுங்கோல் தப்பிப் புலம் பெயர்ந்தவர்களாக வந்த யூதர்கள் சிறுபான்மையினராக வசித்து வந்தனர் பலஸ்தீன மண்ணில். நாளடைவில் பாலஸ்தீனத்திலிருந்த யூதர்களுக்கு தனி நாடு உருவாக்கப்பட வேண்டும் என்று பிரிட்டனிடம் யூதக் குழுக்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், இதற்கு அங்கிருந்த பாலஸ்தீனர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இருப்பினும், இரண்டாவது உலகப் போர் முடிந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, *1948*-ம் ஆண்டு ஐ.நா-வின் ஒப்புதலோடு யூத , அரபுப் பகுதி என பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டது.

அப்போது அரபு நாடுகள் உட்பட பெரும்பாலான உலக நாடுகள் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக ஏற்கவில்லை.

இதன் தொடர்ச்சியாக, அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்ப், 'இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையே *2017*-ஆம் ஆண்டு 'கிழக்கு ஜெருசலேமில் புதிய தலைநகருடன் கூடிய பாலஸ்தீன அரசு உருவாகும் ; ஆனால், ஜெருசலேமே பிரிக்கப்படாத தலைநகரமாக இஸ்ரேலுடன் தொடர்ந்து இருக்கும்' என்று அறிவித்தார். ட்ரம்பின் முடிவை நிராகரிப்பதாக பாலஸ்தீனம் அறிவித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், எதிர்ப்பை மீறி, ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்க அரசு அறிவித்தது. இவ்விவகாரத்தில் துருக்கியும், ஈரானும் பாலஸ்தீனத்துக்கு துணையாய் இருந்தன. பிற அரபு நாடுகள் பலவும் பாலஸ்தீனத்தை கைவிட்டுவிட்டன.

2022-ல் உக்ரைன் - ரஷ்யா இடையே போர் மூண்டபோது, கிழக்கு ஜெருசலேமில் டமாஸ்கட் கேட் பகுதியில் கூடியிருந்த பாலஸ்தீனர்களை நோக்கி இஸ்ரேல் ராணுவம் கொடூரமான தாக்குதலை அரங்கேற்றியது. பல ஆண்டுகளாக அல் அக்ஸா மசூதி, காசா பகுதி போன்ற இடங்களில் நாள்தோறும் பாலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

பாலஸ்தீனத்தின் தன்னாட்சி பெற்ற பகுதியாக காசா முனைப் பகுதி உள்ளது. இந்தப் பகுதி பாலஸ்தீனத்தின் ஹமாஸ் ஆயுதக் குழு அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இவ்வமைப்புத்தான் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தொடர் தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.. ஹமாஸிடமிருந்து காசாவைக் கைப்பற்ற இஸ்ரேலும் பதில் தாக்குதலை நடாத்துகிறது. இந்தச் சூழலில்தான் கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி, ஆயிரக்கணக்கான ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவி ஹமாஸ் அமைப்பு தற்போது நடக்கும் போரைத் தொடக்கி வைத்திருக்கிறது. இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பது இரு நாடுகளைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் தான்.

வரலாற்றில் இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே நடந்த சிறப்புமிக்க ஒப்பந்தமாக ஒஸ்லோ ஒப்பந்தம் இன்று வரை குறிப்பிடப்படுகிறது. ஒஸ்லோ ஒப்பந்தம் தோல்வியில் முடிந்தாலும் இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே அமைதி ஏற்படுவதற்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்திவிடும் என உலகத்தவர் நம்பினர்.

விரைவில் அமைதி நிலவ வேண்டும்.
மக்கள் தம் வாழ்வைத் தமதாக்க வேண்டும்.

**மரணம் வழங்கும் மனித வெறி ஓயட்டும்!**

## தாரகை

**மின் மினிப் பூச்சிபோல் விண்ணிலே**
**மின்னியது நீ என்று கண்டுகொண்டேன்**
**சின்னஞ்சிறு மணியே நான் உனை**
**சிந்தையுள் நிறைத்துக் கொண்டேன்**

**கண்மணியே நான் உன்னைக்**
**கண்ணால் கண்ட நொடி**
**மண்ணிலே நான் இருப்பதை**
**மறந்துதான் போனேனடி..**

**சின்னஞ்சிறு முத்துப் போல் உள்ள உன்னை**
**சிப்பிக்குள் இருந்து எடுத்தது யாரோ?**
**கன்னங்கரு இருட்டிலும் கூடக்**
**கதிரொளி பரப்பியது நீயோ ?**

**கண்ணே நீ எனைப் பார்த்துக்**
**கண்சிமிட்டிச் சிரிக்கும் பொழுது என்**
**கண்ணால்தான் உன்னைக்**
**கண்சிமிட்டாமல் பார்க்கின்றேன்..**

**மழைக்காலம் வந்தால் என்**
**மனம் வாடி போகிறதே**
**மழை வந்தால் நீ வானில்**
**மலராமல் போகிறாயே !**

**வான் என்ற தடாகத்தில் பூத்த தாமரையே**
**வாராயோ எந்தன் அருகினில் நீயே**
**என் உள்ளத்தினுள் பூத்த தாமரையே**
**என் வாழ்விற்கு ஒளியூட்டும் தாரகையும் நீயே**

நிருஸிகா
யா/விக்ரோறியாக் கல்லூரி

**சிந்திக்க சில நேரம் ....**



**2. ஐந்து *9* களை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் ஆனால் விடை *10* என வரவேண்டும் அது எப்படி ?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

**"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்"**, என்ற கூற்றுக்கிணங்க ஒவ்வொரு மனிதனதும் வாசிப்புப் பழக்கம் அவனை உயர்வடையச் செய்கிறது.

நூல்களை வாசிப்பதால் மனிதனது அறிவு வளருகின்றது, பல புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் சிறந்த பயனுள்ள பொழுதுபோக்காகவும் அமைகிறது. வாசிப்பதன் மூலம் பொறுமை, கிரகிப்பு, தேடல் போன்ற பல திறன்களும் மனிதனிடம் வளருகின்றன.

இந்த வகையில் நாம் வாசிக்கும் நுல்களே நமக்கு நல்ல நண்பர்களாக அமைந்துவிடுகின்றன. நாம் நல்ல நூல்களை வாசிப்பதால் பூரண மானிதனாக மாற்றப்படுகின்றோம். நூல்கள் எமக்கு வழிகாட்டிகளாகவும், நல்ல பாதையை எமக்கு காட்டுபவையாகவும் அமைகின்றன.

நாம் நூலகங்களிற்குச் சென்று நூல்களைத் தேடி வாசிக்கப் பழகுதல் வேண்டும். சிறு வயதிலிருந்தே நாம் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை கைக் கொண்டுவர வேண்டும். நாம் வாசிக்கும் நூல்கள் எம்மால் கவரப் பட்டால் அவை எமது நண்பர்களாக அமைந்து விடுகின்றன.

அதாவது நல்ல நண்பன் ஒருவன் எம்முடன் அன்பாகப் பழகி எவ்வாறு நல்வழிப் படுத்துவானோ அதே போல இந்த நூல்களும் எம்மை நல்வழிப்படுத்தக் கூடியவை.

**நூலகம் என்பது தேன் கூடு .**
**நூல்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள்.**
**நூலகம் என்பது பூங்காடு.**
**நூல்கள் ஒவ்வொன்றும் நறுமலர்கள்.**

என்று நூலகத்தையும், நூல்களையும் வர்ணிக்கலாம். நூல்களிலே பல வகைகள் உள்ளன. அவற்றை சஞ்சிகைகள், கதைப் புத்தகங்கள், கட்டுரைப் புத்தகங்கள் , சமயம் சார்ந்த புத்தகங்கள், விடுகதை மற்றும் பாடல் புத்தகங்கள் என வகைப்படுத்தலாம். பல விதமான இசைகளாக உருவாகி மனித மனங்களை ஆட்கொள்கின்றன.

எமது வயதிற்கேற்ப அறிவை வளர்க்கும் நல்ல நூல்களையே நாம் வாசிக்க வேண்டும். இதனாலேதான் அவை எமக்கு நல்ல நண்பர்களைப் போல அமைந்துவிடுகின்றன.

இதனாலேயே தான் பாடசாலையில் நூலகம் அமைத்து நாம் வாசிப்பதற்கான வசதிகளை எமக்கு அதிபர், ஆசிரியர்கள் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

இதே போல் ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நிலையங்கள் உருவாக வேண்டும். இதன் மூலம் கிராமத்தில் வாழும் இளைஞர், யுவதிகளின் வாசிப்புத்திறனை மேம்படுத்தலாம். தற்காலத்தில் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் மாணவர்கள் உட்பட அனைவரும் தொலைபேசிப் பாவனையால் தமது நேரங்களை பயனற்றதாக்குகிறார்கள்.

இவ்வாறு வாசிப்பு மாணவர்களிடையே அருகி வருவதால் நிறைவான, ஆளுமைமிக்க மாணவர்கள் குறைந்து செல்கின்றனர். அத்தோடு பல் துறை சார்ந்த நூல்களை வாசிக்கத் தவறுவதால் மொழியின் தன்மையும் குறைவடைந்து செல்கின்றது.

இன்றைய சூழலில் இணைய வழித்தேடலின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது; இதனால் மாணவர்கள் தமக்கு தேவையானவற்றை விட தேவையற்ற விடயங்களை பார்ப்பதனால் பஞ்சமாபாதகங்கள் அதிகரித்து விட்டன.

**"ஒரு நூல் நிலையம் திறக்கப்படுவதால் ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன";** என்ற அறிஞர்களின் கூற்றின் மூலம் நூலகத்தின் மகிமையை நாம் அறிய முடிகிறது. நாம் வாசிப்பில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் வீண் சண்டை, களவு, கொள்ளை, பொய் மற்றும் தேவையற்ற சிந்தனைகள் இல்லாமல் சந்தோசமாக வாழ முடியும்.

ஆகவே சிறு வயதிலிருந்தே எமக்குத் தேவையான மற்றும் நல்ல நூல்களை நாம் வாசிக்கப் பழக வேண்டும். இதன் மூலம் நல்ல நூல்கள் எமக்கு நல்ல நண்பர்களாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணக்கரு விளக்க படம்




### சமுதாய வலையில் சிக்குண்ட நாம்

சுழல்கின்ற பூமியிலே
சூழலாக சக்கரங்களாகவே
தொடர்கிறது வாழ்வு
மனிதன் எனும் சமூக விலங்கை
பல பாசக்கயிறு கொண்டு இழுக்கிறது
இந்தச் சமுதாயம் .....
தூக்கி விட வேண்டிய வேளையில்
அவனை கீழ் தள்ளிவிட்டும்
தட்டிக் கொடுக்க வேண்டியவர்களே
தன்னம்பிக்கையை குலைக்கின்ற – மனிதர்கள்
மலிந்த புதுயுகம் இது
செய் நன்மையை பாராட்ட
தெரியா இவ்வுலகம்
பேசுவதுதான் என்ன நீதியோ.
வெட்கமடைகிறேன்.
இந்த சமுதாயத்தை எண்ணி !
கொடுமை மிகு இச் சமுதாயத்தை
மண்ணிலே புதைத்து – நல்லதோர்
சமூகம் வேண்டி நாமும்
மறுமலர்ச்சி செய்வோம்.

மனாஷா.சுதாகரன் (தரம்11
யா/வேம்படி ம.உ.பாடசாலை

## பேத்தை மீன்

பேத்தா அல்லது பேத்தை மீன் அல்லது பேத்தையன் மீன் அல்லது முள்ளம்பன்றி மீன் என இது அழைக்கப்படும்.

இம்மீன் தன் உடலைப் பத்து மடங்கு பருமன் உள்ளதாக மாற்றிக்கொள்ளும் திறன் வாய்ந்தது.

நீர் அல்லது காற்றைக்கொண்டு தனது உடலை ஊதிப்பெருக்கும். சில சமயங்களில் காற்றை நிரப்பிக்கொண்டு

ரப்பர் பந்துபோல கடலில் மிதக்கும். ஏதாவது பறவை இதைப் பிடித்தாலும் இது ஊதிப்பெருகுவதால் இதை விழுங்க இயலாமல் விட்டுவிடும்.இம்மீனின் உடலில் முட்கள் காணப்படுகின்றன. இது ஒரு நச்சு மீன் என்பதால் இதை பெரும்பாலான மீன்கள் உண்பதில்லை. மீறி உண்டால் இது ஊதிப் பெருகி விழுங்கும் மீனின் தொண்டையில் சிக்கி அந்த மீனைக் கொன்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பெற்ற மகிழ்ச்சியும் பெருமையும்

நான் பெற்ற மகிழ்ச்சியும் பெருமையும் என்னவென்றால் நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். நான் தரம் ஒன்றிலிருந்து எனது கல்வியை யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கற்று வந்தேன்.

நான் ஒவ்வொரு வகுப்பிலும் படிப்படியாக, கல்வியில் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் படித்து முன்னேறினேன். எனக்கு உறுதுணையாகவும் பக்க பலமாகவும் அதிபர், ஆசான்கள், பெற்றோர்கள் எனப் பல தெய்வங்கள் என்னை வழிப்படுத்தினார்கள். எனது பெற்றோர்கள் எனது அருகிலிருந்து எனக்கு கல்வியைக் கற்று தந்தனர். நான் அதிகாலையிலும் அந்திமாலையிலும் கல்வி கற்பேன்.

எனது பெற்றோர்களும் குறிப்பிட்ட நேரத்தில் உணவும் தந்து அதே வேளையில் நான் கற்க வேண்டும் என்று பல கடைகள் ஏறி இறங்கி எனக்கு தேவையான பொருட்களனைத்தும் வாங்கித் தருவார்கள். எனது பெற்றோர்களின் ஊக்குவிப்பினாலும் எனது கற்றல் ஆர்வத்தினாலும் நான் படித்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

நான் சித்தியடைந்து எனது பெற்றோர்களுக்கும் எனது நல்லுள்ளம் கொண்ட ஆசான்களுக்கும் எனது பாடசாலைக்கும் எனது சமுதாயத்திற்கும் பெருமையையும், மகிழ்ச்சியையும் பெற்றுக் கொடுத்தேன். நான் பாடசாலையிலும் வீட்டிலும் பல வினாத்தாள்கள், பல பயிற்சிப் புத்தகங்கள் செய்து முன்னேறினேன்.

அத்துடன் நான் பாடசாலை விடுமுறைக் காலங்களில் தொலைபேசியில் தொலைத்தொடர்பு கல்வியை மேற்கொண்டேன். பாடசாலை விடுமுறைக் காலத்தில் கூட எனது படிப்பைக் கைவிடாது தொடந்து கல்வியைக் கற்றேன். பின்னர் என் ஊக்கத்துடன் இறைவனின் அருளும் என்னுடன் இருந்தது. எனக்கு ஒரு நாள் அதிகாலையில் நித்திரை வந்து விட்டது;

ஆனால் அந்நாளில் தான் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியானது. அதனை எனது அம்மா அறிந்து கொண்டு என்னை எழுப்பினார். நான் எழும்பவில்லை; ஆனால் அம்மாவோ பரபரப்புடன் இருந்தார். அப்போது எனது வகுப்பு ஆசான் அம்மாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது சுட்டெண்ணை வாங்கிக் கொண்டார்.

சற்று நேரத்தில் தொலைபேசியில் அழைத்து உங்களது மகள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டார் எனக் கூறினார். அம்மா உடன் ஆனந்தத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

சட்டென அம்மா என்னை நித்திரையிலிருந்து எழுப்பிக் கூறிய பொழுது எனக்கு வானத்தில் பறப்பது போல் தோன்றியது; அதே நேரம் நான் இவ்வளவு நாளும் படித்தது வீண் போகவில்லை எனவும் தோன்றியது. பின்னர் எனக்கு பல பேரிடமிருந்து வாழ்த்துக்களும் பெருமைகளும் கிடைத்தன.

ஒருவர் ஒரு செயலில் வெற்றி பெற வேண்டும் எனப் பல நாட்கள் கஸ்டப்பட்டு, அதில் வெற்றி அடையும் போது கிடைக்கும் சுகமே ஒரு தனிச் சுகம் தான்.

நாம் வாழும் வாழ்க்கை நிலையற்றது; இப்பவோ, அப்பவோ என இருக்கும் அக் குறுகிய வாழ்விலும் நாம் ஒரு சாதனையாவது படைத்து விட்டுச் செல்ல வேண்டும். நம்மை மதிக்காதவர்கள், ஏளனம் செய்பவர்களை எமது வாழ்விலிருந்து விலக்கி விட வேண்டும்.

இவ் உலகில் எல்லாப் பிள்ளைகளுக்கும் நல்ல பெற்றோர்கள் கிடைக்க மாட்டார்கள்; அப்படிக் கிடைத்தவர்கள் கண்டிப்பாக குடுத்து வைத்தவர்கள். அப்படிக் குடுத்து வைத்தவர்களில் நானும் ஒன்றாவேன். நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததை அறிந்து எனது பாடசாலையிலும் நான் கற்ற வேறு நிறுவனங்களிலும் எனக்கு பதக்கங்கள் மற்றும் வாழ்த்து மடல்கள் தந்து கௌரவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பெற்றோர்களும் நான் கேட்பதை வாங்கித் தந்தார்கள். முக்கியமாக துவிச்சக்கர வண்டி வாங்கித் தந்தார்கள். அத்தோடு என்னை முதல் முறையாக கொழும்பிற்கு சுற்றுலா அழைத்துச் சென்றார்கள்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததைப் போன்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையிலும் ஒன்பது பாடங்களிலும் A புள்ளிகள் பெற்று எனது பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுப்பேன்.

அத்துடன் நான் புலமைப்பரிசில் பரீட்சையில் எவ்வளவு கஷ்டப்பட்டு படித்தேனோ அதை விட கடுமையாகப் படித்து க.பொ.த உயர் தரத்திலும் மூன்று A சித்திகளைப் பெறுவேன் என நம்பிக்கை வைத்துள்ளேன்

எதிர்காலத்தில் நான் வைத்தியராகி உலகில் உள்ள சகல விதனமான நோய்களிற்கும் தீர்வு காணுவேன்.

குறிப்பாக ஏழை மக்களின் நோய்களை உடனே தீர்த்து வைப்பேன். இவ்வுலகை சுகாதாரமானதாக மாற்றுவேன் என உறுதி மொழி அளிக்கிறேன்.

ப.ஹிந்துஷா (தரம்-06)
யா/ப. மெ.ம.வித்தியாலயம்

## விடுகதை

- தாய் குப்பையில் மகள் சந்தையில் அவள் யார்?
- கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார் ஆனாலும் நல்லவர் அவர் யார்?
- இளமையில் பச்சை முதுமையில் சிவப்பு குணத்திலே எரிப்பு அது என்ன?
- உனக்கு சொந்தமான பொருள் ஆனால் மற்றவர்கள்தான் அதிகமாக பயன்படுத்துவார்கள் அது என்ன?
- இரு கால்வாய் உள்ளே போகவும் முடியும்வெளியே வரவும் முடியும் அடைத்தால் உயிர் விடவும் முடியும்?

## நம் நாடு

நித்திலப் பூமியில் நித்தியமாய் வாழ்ந்திட
எத்திசையும் சோபனமாய்
எண்திசையும் பேரொளியாய்
சிறந்திடுமே எம் நாடு
தேசத்தின் உயர்வுதனை
புவியெங்கும் பரப்பிடுவோம்

சுயமான சிந்தனை சுகமான வாழ்வு
நலமாக வாழ்ந்திட புதுவாழ்வை தேடு
உழைப்பின் வலிமை கொண்டு
தேசமதை போற்றிடுவோம்
கலைகள் புதிதாய் படைத்திங்கு
கனவுகள் மெய்ப்பட
பொங்கும் உணர்வுடன்
புதிதாய் நாம் எழுவோம்

இயற்கை வளமிக்க பூமி இது
சமுத்திர முத்தென ஒளிர்ந்திடுமே
காடும் களனியும் கானவர் வாழ்வும்
பசும் உயர் நிலமும்
வளமான ஆறும் நிறைந்திட்ட பூமியிலே
பல்லின மக்கள் நாம்
அன்னை தாயின் மடியினிலே
பல்லாண்டு வாழ்ந்திடுவோம்

சரணியா அருந்தவன் (தரம் -10B)
யா/வட்டு இந்துக் கல்லூரி

1. மனித உடலின் மிகப்பெரிய உறுப்பு?
   தோல்
2. எடை குறைந்த உடல் உறுப்பு?
   நுரையீரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக வாசிப்பு

ஒரு ஊரிலே ஒரு போதகர் இருந்தார். அவர் மிகவும் புத்திசாலி மற்றும் அனுபவசாலியானவர். அவரின் போதனையை கேட்க பல மக்கள் செல்வார்கள். ஒருநாள் அவர் அயல் கிராமத்துக்கு வந்துள்ளதாக கேள்விப்பட்டு ஊர் மக்கள் அனைவரும் சென்றார்கள்.

நானும் எனது நண்பன் சாருவும் அவரைப் பார்க்க சென்றோம். அவர் நிறைய விடயங்களைத் தன் அனுபவக் கதைகள் மூலம் கூறிக்கொண்டிருந்தார். எங்கள் வயது போதனையை செவிமடுக்கவில்லை. நாங்கள் சென்றது அவரைப் பார்ப்பதற்கு; இருப்பினும் அவர் நிறைய நூல்களை வாசியுங்கள் என்று கூறியது மட்டும் என் மனதில் பதிந்து விட்டது

அதன் பிறகு நான் நிறையப் புத்தகங்களை வாசித்தேன். அந்தப் போதகர் சொன்னதால் அல்ல; என் அக்கா கே.ஏ.சத்தியமனை நூலகத்திற்கு தினமும் போவதுடன் சில சமயங்களில் என்னையும் அழைத்து செல்வாள்.

அங்கு இருக்கும் புத்தகங்களில் சிலதை தேர்வு செய்து வாசிக்கும் படி தருவாள். வாசித்ததைக் கேட்டால் சொல்ல வேண்டும் என்பதற்காக வாசித்து இன்று புத்தகம் வாசித்தல் பழக்கமாகிவிட்டது. இருப்பினும் எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது.

அந்த சந்தேகத்திற்கு முன்பு ஒரு நாள் நான் சந்தித்த போதகரே பதில் கூற முடியும் என்று நினைத்தேன். அப்படி இருக்க ஒரு நாள் அந்த போதகர் எனது ஊருக்கு வந்தார். அவரை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று சென்றேன். அவரிடம் பேச அனுமதி கிட்டியது. "குழந்தாய் என்ன வேண்டும்" என அவர் கேட்டார்.

நான் முன்பு அவரை பார்க்க சென்றதை கூறிவிட்டு எனது சந்தேகத்தை கூறினேன். நீங்கள் உங்கள் போதனையில் நிறைய புத்தகங்களை வாசியுங்கள் என்று கூறுகின்றீர்கள் நானும் நிறைய நூல்களை வாசிக்கிறேன். வாசிக்கும் அனைத்தும் என் ஞாபகத்தில் இருப்பது இல்லை என்றேன். போதகர் சிரித்தார். என்னை அழைத்துச் சென்று. ஒரு வாளியை காட்டி அதில் "தண்ணீரை எடுத்துக் கொண்டு வர சொன்னார்". வாளியோ ஓட்டையாகவும் சேறுடனும் இருந்தது.

இதில் எவ்வாறு தண்ணீர் அள்ள முடியும் என்று எண்ணிக்கொண்டே தண்ணீரை நிரப்பினேன். வாளி ஓட்டை என்பதால் தண்ணீர் சிறிது நேரத்திலேயே ஓடிவிட்டது. இருப்பினும் நான் பல தடவை தண்ணீரை நிரப்பி வேகமாக ஓடினேன். வாளியை நீருடன் கொண்டு செல்ல முடியவில்லை.

கோபத்துடன் போதகரிடம் சென்றேன். நடந்ததை கூறினேன். போதகர் "முன்பு இவ் வாளி சேறு பாசியுடன் இருந்தது இப்பொழுது பார் நீ ஒவ்வொரு முறையும் தண்ணீரை நிரப்பும் போது வாளி சுத்தமாகிவிட்டது.

உன் நோக்கம் நீர் நிரப்புவதில் இருந்தாலும் நீ உன்னை அறியாமலே வாளியையும் சுத்தம் செய்திருக்கிறாய் அல்லவா. அதுபோலத்தான் நீ நிறைய புத்தகங்களை வாசி, வாளியில் இருந்த சேறு பாசி போல் உன் மனதில் இருக்கும் தேவையற்ற சிந்தனை, கவலை,மன அழுத்தம் அனைத்தும் உன்னை அறியாமல் அகன்றுவிடும்.

புத்தக வாசிப்பு புலனடக்கத்தை ஏற்படுத்தும். வாசிக்கும் அனைத்தும் மனதில் நிற்க வேண்டும் என்று எண்ணாதே. உனக்கு தேவையானவை உன் மனதில் பதியும்.

முதல் முதலில் என்னை சந்திக்கும் போது நான் எவ்வளவு கூறியிருந்தேன். அவற்றில் புத்தக வாசிப்பை பற்றி கூறியது மட்டும் உன் மனதில் பதிந்ததாக கூறினாய் அல்லவா. அதே போலத் தான் இதுவும்" என போதகர் கூறினார். அன்றிலிருந்து நூலகத்தில் வாசகர் ஆகி இன்று எண்ணிலடங்காத நூல்களுக்கு அடிமையாகிவிட்டேன்.

**"வாசிப்பதால் மனிதன் மாற்றமடைகிறான்"**

**-ஜெயச்சந்திரன் தஜிதரன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்தது ஏனோ?



எழுதவென்று எடுத்தேன்
எழுதுகோலை
வரிகள்
தடம்புரண்டோடின
வார்த்தைகள்
வாயில் மின்னின
எழுத ஆரம்பித்தேன்
எண்ணங்கள் பல வண்ணம்
இருந்தும்

வெள்ளைத்தாளிலே
கருமை படர
வைத்தேன் எழுதுகோலை
வெள்ளைத்தாளிலே
கண் திருஷ்டி வைத்தால் போல்
எழுத்து முனை
நகரவில்லை
அதே இடத்தில்

சற்றும் நகராமல்
எதை எழுத
எதைப் பற்றி எழுத
கேள்வி எழுப்பியது
கருமை எழுதுகோல்
விடை தெரியா நொடியாய்
திளைத்திருந்தது
மனமதுவே

நினைவுகள்
நின்று விடவில்லை
ஏக்கங்கள்
அலைமோதின
கலகலப்பாய்
கதைகள் பேசினோம்
இடையிடையே
சிறு சிறு சண்டைக்காய்
முகத்தை மறுமுனை திருப்பி
உதட்டினைச் சுழித்தோம்
மாங்காய்க்காக மதிலேறி
மாமர உச்சிக்கிளை தொட்டோம்
ஒருவரின் உணவுக்காய்
பல கைகளால் வட்டமிட்டோம்

வீட்டு வேலை செய்யாது
கொப்பியும் அடித்தோம்
முதல் வரிசை தனிலமர
போட்டிகள் போட்டோம்

தவணைப்பரீட்சையிலே
ஒரு புள்ளி உயர்வுக்காய்
உபாத்தியரை
பின் தொடர்ந்தோம்
கூட்டு முறையிலே
பிந்திப்போய்
குப்பையும் கிள்ளிப் போட்டோம்

ஒரு வகுப்பிலே இரண்டு
அணியாய் போட்டி
போட்டுப் படித்தோம்
தேர்ச்சி அறிக்கையினை
பெற்றோர் எடுக்கையிலே
ஓடி ஒழிந்தோம்

காதல் லீலைகளும்
இடையிடையே வந்து
மலர்ந்தது நம்மிடையே
விளையாட்டுப் போட்டிகளும்
கலை நிகழ்வுகளும்
குரு பூசைகளும்
ஆசிரியர் தினங்களும் என
கோலாகலமாகக் கொண்டாட்டம்
கொண்டாடிய காலம் அது

எழுது கருவி கூட
சோர்வடைய
எண்ணிலடங்கா நினைவலைகள்
வந்து நனைக்க
எழுது கருவி தன் ஆற்றலை
இழந்ததேனோ .......?

*லக்சிகா கணேசரத்தினம் (தரம் 11)*
விக்ரோறியாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தாவின் விருந்து

ஓர் ஊரில் வயதான முதியவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஓர் பணக்காரர். அவரிற்கு ஐந்து பிள்ளைகள் இருந்தனர்.

அவர்கள் வேலையின் பொருட்டும் திருமணமாகியும் வெளிநாடுகளிற்கு சென்று விட்டனர். இவரது மனைவி ஒரு நோயினால் இறந்து விட்டார். இவருக்குத் தனிமையில் இருப்பது சோகத்தை தந்ததினால் ஒரு முடிவுக்கு வந்தார்.

தன்னிடமுள்ள பணத்தொகைகளைத் திரட்டி ஒரு குளிர்பானக் கடை உருவாக்கினார். இவ்வாறு இவர் நாட்கள் கழிந்தன.

பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் தொலைபேசியில் உரையாடுவதும் தன் கடையில் நேரத்தை செலவழிப்பதுமாக தனது வாழ்க்கையைச் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்.

ஆனால் தமது பிள்ளைகளுக்கிடையில் ஒற்றுமையில்லை என்பதை உணர்ந்த முதியவர் வேதனைப்பட்டார்.

முதியவரின் குடும்பத்திற்கு ஓர் பழக்கம் இருந்தது; வருடத்தின் குறித்த ஒருநாளில் முதியவர் வீட்டில் விருந்து ஒன்றிற்காக அனைவரும் வருகை தந்து கலந்து கொள்வது, முதியவரின் 90 வது வயதிற்கான வருடம் வந்தது இவ் வருடத்தில் வரும் விருந்தில் அவர்களுக்கு ஓர் விடயத்தை உணர்த்த எண்ணினார். அந்நாளுக்காக காத்திருந்தார் முதியவர். அந்நாளும் வந்தது; முதியவரின் குடும்ப உறுப்பினர்களும் வந்தனர். விருந்து ஆயத்தமானது,



அப்போது முதியவர் எல்லோரையும் கூர்ந்து அவதானித்தார். அவர்களில் எதோ பிரச்சனைகள் இருப்பதை அவதானித்தார். விருந்து முடிந்தது. முதியவர் எல்லோரையும் அழைத்து ஒன்று கூறினார்.

"இது ஓர் வேடிக்கையான விளையாட்டு. இதில் எல்லோரும் கலந்து கொள்ளுவது நல்லது இதில் கலந்து கொண்டு வெற்றி பெறுவோருக்கு எனது பண்ணையை எழுதி வைப்பேன்.

அத்துடன் விளையாட்டின் விதிமுறைகளாவன முதலாம் சுற்றில் ஓர் பொருள் தரப்படும், அதனை 15 நிமிடங்கள் கையில் வைத்திருத்தல் வேண்டும். அதில் வெற்றி பெறுபவர்கள் அடுத்த சுற்றுக்கு தெரிவுசெய்யப் படுவீர்கள். அச்சுற்றிலும் அதே நிபந்தனையில் போட்டி நடைபெறும்" என்று கூறினார். பண்ணை கிடைக்க போகிறது என்ற மகிழ்ச்சியில் எல்லோரும் போட்டிக்கு தயாரானார்கள். போட்டி ஆரம்பமானது.

எல்லோரிடமும் ஓர் பாத்திரம் கொடுக்கப்பட்டது. சில நிமிடங்களில் சில போட்டியாளர்கள் போட்டியில் இருந்து நீங்கினார். இவ்வாறு போட்டி முடிவில் 3 போட்டியாளர்கள் எஞ்சி இருந்தனர்.

அடுத்த சுற்றுக்கு அவர்கள் தெரிவாகினர். அடுத்தசுற்றிலும் அதேபோல் பாத்திரங்கள் கொடுக்கப்பட்டன. வாங்கிய சில வினாடிகளிலேயே போட்டியாளர்கள் இடைவிலகினார்கள். போட்டி முடிவுக்கு வந்தது. முதியவர் "போட்டியில் யாரும் வெற்றிபெறவில்லை " எனக் கூறினார்

பாத்திரங்களில் கொடுக்கப்பட்டது முதல் சுற்றில் பனிக்கட்டிகளும், 2 ஆம் சுற்றில் நெருப்பு தணல்களும் ஆகும். இதனால் கோபமடைந்த முதியவரின் பிள்ளைகள் "இது நியாயமான போட்டியல்ல இதனை எவ்வாறு கைகளில் தாங்குவது" என்று கேட்டு முரண்பட்டனர்.

- அம்சா பாலகிருஷ்ணன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது முதியவர் புன்னகையுடன் "நான் இவ்விளையாட்டில் உங்களைப் புண்படுத்த நினைக்கவில்லை மாறாக ஒரு விஷயத்தை உணர்த்தவே முன்வந்தேன், அதாவது நம் மனதில் உள்ள பயம், பொறாமை, ஆணவம் என்பன நீங்கள் தாங்கிய குளிரான உணர்வுகளாகவும், கோவம், பழிவாங்குதல், வெறுப்பு என்பன சூடான உணர்வுகளாகவும் கருதப்படுகின்றன. இவற்றை அதிகம் மனதில் சுமப்பதால் மனது மரத்து போவதோடு, சூடான உணர்வுகளை சுமப்பதால் மனது கொப்பளித்து விடுகிறது. இதனால் நீங்கள் போட்டியில் அடைந்த முடிவையே வாழ்க்கையிலும் பெறுவீர்கள்" என்று கூறினார்.

இதன் மூலம் நாம் பெறும் படிப்பினையாவது **உணர்வுகளைச் சரியான முறையிலும் அளவானதாகவும் கையாளுதல் அவசியமாகும்.**

**மாம்பழம்**



**நான் ஒரு இனிய பழம் எனக்கு பல சகோதரர்கள் உள்ளனர்.**
**அவர்கள் வெவ்வேறு சுவைகளைத் தருவார்கள்.**
**என்னிடம் நீர்ச்சத்து, விட்டமின்C, விட்டமின் B6 போன்ற சத்துக்கள் உள்ளன.**
**என்னை சாப்பிடுவதால் இரத்த அழுத்தம் குறையும் ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.**
**நாம் இலகுவாக கிடைப்போம் எம்மை சுவைத்து மகிழுங்கள்.**

*நி. நிலுக்ஸன் (தரம் -02)*
யா/ சுழிபுரம் கி. அ.மி.த.க பாடசாலை

# நிமிடக் கவிதைகள்

* எரிகிறது நெருப்பில்லை
புகைகிறது மணமில்லை
நோயாளியின் வயிறு

* ஊட்டி வளர்த்த கிடாய்
வெட்டி வீழ்த்தப்பட்டது
வளர்த்தவனின் எட்டுச்செலவுக்கு

* எனது ஜோடியை மாற்றினேன்
கல்யாண மண்டபமொன்றில்
ஒற்றைக்கால் செருப்பு

* குழந்தையை தோளில்
சுமக்கிறார் தந்தை
தான் பாராத உலகைப் பார்ப்பதற்கு

* ஒரு நாளைக்கு அவள் பார்வை
இரு தடவையாவது வேண்டும்
சுடச்சுடத் தேநீர்

* பெற்றவர்கள் இருவரும்
பிரிந்து சென்று மறுமணம்
வாழ்த்துமடல் எழுதும் மகன்கள்
அநாதை இல்லத்திலிருந்து .......

* வலையில் சிக்ககுண்டது
பாரை மீனல்ல
இதய தாரகை

* மடியில் முடிகிறது
மடிக்கணினி
துண்டிக்கப்பட்ட தொடர்பால் ...

* இளம் சிவப்பு நிறத்தில்
அஸ்தமிக்கும் தருணம்
சூரியனுக்கும் கண்நோயா ?

* நன்னீரையே காணாது
உக்கிப்போகும் உப்பால்
வாடுகிறது கருவாடு

* உள்ளெடுக்க முதல் மூச்சிற்கும்
உள்ளெடுக்க முடியாத மூச்சிற்கும்
இடைப்பட்டது வாழ்க்கை

*செ.சுகிர்தா [ஆசிரியர்]*
*யா/விக்ரோறியாக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளவெண்பா

கலைமதி சந்திரராசா

நளனது வரலாற்றினை வெண்பா யாப்பில் பாடிய காப்பியம் நளவெண்பா எனப்படுகிறது.

நளவெண்பா **புகழேந்தி புலவரால்** இயற்றப்பட்டது.

நளவெண்பா மூன்று காண்டங்களையும் 405 வெண்பாக்களையும் அமைப்பு முறையாக கொண்டது.

நளவெண்பாவில் **சுயம்பரக்காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்** எனக் மூன்று காண்டங்கள் உள்ளன.

நளவெண்பா நளன் மற்றும் தமயந்தியினது வரலாற்றை கூறுகிறது.

நளன் என்னும் மன்னன் நிடத நாட்டை ஆள்பவன்.

தமயந்தி விதர்ப்ப நாட்டைச் சேர்ந்த இளவரசி; வீமனின் மகளாவாள்.

இவ்விலக்கியத்தில் அன்னம் தோன்றிய காட்சி **"தாமரை மலரில் தங்கி வாழும் அன்னமானது தன் உடலின் வெண்மை நிறத்தினால் சேலையின் பசுமை நிறம் வெண்மை நிறமாக மாறிடவும், அதனுடைய கால்களின் செம்மை (சிவப்பு )நிறத்தினால் அங்குள்ள தடாகத்தின் நீரெல்லாம் சிவப்பு நிறமாய் மாறும் படியாகவும் அன்னம் அங்கு தோன்றியது"** என்று புகழேந்தி புலவர் வர்ணிக்கிறார்.

நளன் அன்னத்தைப் பிடிக்கச் சொன்னதன் காரணம் அன்னத்தினது அழகிய நடையிலும், வஞ்சிக்கொடி போன்ற இடையினை உடைய பெண்களின் அழகிய நடையிலும் எது சிறந்த நடை என்பதை கண்டறிவதற்காக எனக்கூறப்பட்டுள்ளது.

அன்னத்தை மகளிர் பிடிக்கும் காட்சியானது அழகுற வர்ணிக்கப்படுகிறது. பசுமையான கூந்தலை உடைய அப்பெண்கள் சிறந்த மயில் கூட்டமானது ஓடி சுற்றி வளைத்தது போல அவ் அன்னத்தை சூழ்ந்து அதனைப் பிடித்தனர் என வர்ணிக்கப்படுகிறது.

இவ்விலக்கியத்தில் நளனின் ஆட்சி சிறப்பாக "மகளிர் பருந்தினையும், கிளியையும் தம் அருகில் வைத்து, பாலும், பழமும் ஊட்டி வளர்த்திட, அவை பகை நீங்கி ஒரே கூட்டினுள் வாழும் படியாக, குளிர்ச்சியான நிலவு போன்ற வெண்கொற்றக்குடையின் கீழ் சிறந்த அறங்கள் நிற்க - தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லை எனும் படிக்கு தன் நாட்டினை ஆட்சி செய்தான்" என கூறப்படுகிறது.

**நளனது சிறப்பும் பெருமைகளும்**

மகரந்தப் பொடி சிந்துகின்ற மலர்மாலை அணிந்தவன்.

நீர்வளம் பொருந்திய நிடத நாட்டின் மன்னன்.

மாட்சிமைப்பட்ட அழகினை உடையவன்.

கொலைக்குணம் இல்லாதவன்.

வெண்கொற்றக்குடையும், தேர்ப்படையும் கொண்டவன்.

**இவ்விலக்கியத்தில் தமயந்தியின் அழகு**

விதர்ப்ப நாட்டைச் சேர்ந்த இளவரசி.

மென்மையான தோள்களை உடையவள்.

மூங்கில் போன்ற அழகுடையவள்.

தெய்வப்பெண் போன்றவள் என்றும் கூறப்படுகிறது.

இவ்விலக்கியத்தில் உவமையணிகள் கையாளப்பட்டுள்ளன உதாரணமாக

மயில் கூட்டம் சுற்றி வளைப்பதைப் போல

பெண்கள் அன்னத்தைச் சுற்றி வளைத்தல்

திருமகள் போன்ற அழகுடைய தோழி

தெய்வப் பெண் போன்ற தமயந்தி

**அரும்பதங்கள்**

சீதம் - குளிர்ச்சி

தாது - மகரந்தம்

பூந்தாரன் - பூமாலை அணிந்த நளன்

வேரி - தேன்

மேதிக்குலம் - எருமைக்கூட்டம்

வாங்குவளை - வளைந்தவளையல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவுத்தொழிலின் பெருமை

எஸ் சத்தியமனை நூலகம்
பதிவு. இல. -VW/FN/BR/1/38/2022
சுழிபுரம்- 40230
இலங்கை

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்கிறார் திருவள்ளுவர். அதாவது உலகத்துக்கு உழவு செய்து உணவளிக்கும் உழவர்களே சிறந்தவர் மற்றவர் எல்லோரும் அவரை வணங்கியே வாழ வேண்டும்; இந்த உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் எல்லோருக்கும் உணவளிக்கும் உழவுத்தொழிலே முதன்மையானது என்கிறார். இதன் மூலம் உழவின் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

விவசாயிகளின் பொருளாதார தேவைகளுக்கு உளவே இன்றியமையாததாக உள்ளது. மேலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பேணவும் உழவுத்தொழில் முக்கிய பங்கை வகிக்கிறது.

உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர்வாழ முடியாது. விவசாயி "சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்" இந்த உலகம் பசியாற உழவே உதவுகிறது.பல உயிரினங்களுக்கு வாழ்விடத்தையும் உணவையும் வழங்குகிறது.

இயற்கை விவசாய முறைகள் மண்வளத்தைப் பெருக்குகின்றன.உழவுத்தொழில் ஒரு நாட்டை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய செய்து நாட்டை வளம் பெறச் செய்கிறது.

பண்டைய காலம் தொட்டே மக்களின் பிரதான தொழிலாக உளவு இருந்தமையால் திருவள்ளுவர், ஔவையார், கம்பர் போன்ற பல புலவர்கள் உழவுத்தொழில் மகிமையைப் போற்றிப் பாடிவந்தனர்.

"உழவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து" இந்த குறளில் வள்ளுவர் மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் உழவர்களே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி என்கிறார்.

ஔவையார் "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர் ..." என்று உழவுத்தொழிலுக்கு ஒப்பான தொழில் வேறெதுவுமில்லை என்கிறார். மகாகவி பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.." என்கிறார் ஒரு நாட்டில் விவசாயமும் நடைபெற வேண்டும், தொழில் வளர்ச்சியும் முன்னிலையில் இருத்தல் வேண்டும் என்று உழவின் சிறப்பை பாடுகிறார்.

அவ்வாறே உழவைப் பாதுகாக்க வேண்டின் விவசாயிகளின் நலன் பாதுகாக்க அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டும். உற்பத்திப் பொருட்களுக்கு உண்டான கொள்முதல் விலை ,விற்பனை விலை இரண்டையும் அரசே நிர்மாணிக்க வேண்டும்.

உழவுத் தொழிலுக்கு வேண்டிய வசதிகள் இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்தல், இயற்கை உரங்கள் விவசாயிகளுக்குரிய காப்புறுதி திட்டங்கள் போன்றவற்றை அரசு செய்து கொடுக்க வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளால் உழவைப் பாதுகாக்க முடியும்.

எனவே "ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவும் இல்லை" என்ற வாக்கிற்கு இணங்க உழவுத் தொழிலை விட மகிமையான தொழில் எதுவுமில்லை; நிலத்தை பயன்படுத்தி உணவை உற்பத்தி செய்து ஏனையோரின் பசியாற்றும் உழவுத் தொழிலின் மகிமை அறிந்து அதை கண்ணின் மணியைப் போல பாதுகாத்துப் உழவுத்தொழிலை வந்தனை செய்வோம்.

பி.பிரஷன்யா ( தரம் -7B )
யா/வட்டு இந்துக்கல்லூரி

சிந்திக்க சில நேரம் ...



3. உங்கள் வீட்டுத் தொலைபேசியில் உள்ள எண்களைப் பெருக்க வரும் எண் யாது?

4. ஒருவன் *4* எஞ்சிய சிகரெட்டுகள் கொண்டு *1* சிகரெட்டை செய்வான் அவனிடம் *16* எஞ்சிய சிகரெட்டுகள் கொண்டு எத்தனை சிகரெட் செய்வான்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகம் கலைமகள் ...

# உலக வரலாறு

## அறிமுகம்

இன்றைய மனிதன் நாகரிகத்துடன் வாழ்கிறான். தொடக்க காலம் அப்படி அல்ல. காட்டுமிராண்டியாய், கற்காலம்.தொடங்கி நாடோடி வாழ்வு வாழ்ந்த மனிதன், இன்று அடுத்த கிரகத்தில் காலடி எடுத்து வைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளான். சுமார் 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் மனித இனம் தோன்றியது. டார்வின் என்ற உயிரியல் அறிஞர் உயிர்களின் தோற்றம்- வளர்ச்சி பற்றி ஆராய்ந்து குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்று அறிவித்தார்.



பண்டைய காலத்தின் உலகெங்கும் காடுகளே நிறைந்திருந்தன. மனிதனும் ஒரு விலங்கு போலக் காடுகளில் வாழ்ந்தான் ஓரிடத்தில் நிலைத்து வாழாது உணவு தேடி அலைந்தான்.

கிடைத்ததை உண்டான். இடம் விட்டு இடம் நகர்ந்தான். பழம், காய், இறைச்சி என கிடைத்ததை அப்படியே உண்டான்.பகலில் இரை தேடி அலைந்தான்.

இரவில் மரங்களிலும்காடுகளிலும் வாழ்ந்தான். இயற்கையைக் கண்டு அஞ்சினான் விலங்குகளை கண்டு அஞ்சினான்.

நாளடைவில் உழைப்பு வளர்ந்தது. சிந்தனை விரிவடைந்து வந்தது. நிர்வாணமாய் அலைந்தவன் இலை, தழை, மரப்பட்டை என ஆடை அணிந்தான்.பிறகு தோல் ஆடை வந்தது.தீயின் பலனை அறிந்தான். உணவை சமைத்து உண்ண ஆரம்பித்தான். விவசாயம் கற்றான்.நிலைத்து வாழ்ந்தான்.

கல்லை ஆயுதமாக்கியவன், பிறகு அந்தக் கல்லை செப்பனிட்டு வழவழப்பாக்கி, கூர்மையாக்கி பயன்படுத்தினான்.உலோகம் கண்டான். மண்பாண்டம் செய்தான். இப்படி படிப்படியான வளர்ச்சிகளுக்கு உரிய வாழ்வின் ஒரு முக்கிய திருப்புமுனை “சக்கரம் கண்டுபிடித்தல்” ஆகும்.



பிறகு மொழியை உருவாக்கினான், எழுத்துக்கள் கண்டான். எண்ணத்தை வெளியிட்டான்.கூடி வாழ்ந்தான் ஊர் வந்தது, அரசு வந்தது, நாகரிகம் வந்தது. மதம் வந்தது, இனம் வந்தது. புதியன கண்டான்புதுப்புது இடம் கண்டான் குடியேறினான். படையெடுத்தான் காலனி ஆதிக்கம் வந்தது. போர் வந்தது உடன்படிக்கை சமாதானமும் யுத்தமும் தொடர்ந்தன.

இன்று வியக்கும் வண்ணம் அறிவியல் வந்தது; அடுத்த கிரகத்திற்கு பயணம் செல்லும் அளவிற்கு அறிவியல் வளர்கிறது: மனிதனும் வளர்கிறான் உலகம் தோன்றிய நாள் முதல் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்தான் அது **வரலாறு** ஆகியது, நாட்டை பற்றி உணர்ந்தான்.அது **புவியியல்** ஆகியது.

மனித வாழ்வு பற்றி சிந்தித்தான்.**மதம், தத்துவம்** பிறந்தன. அறிவின் துணை கொண்டு புதியன கற்றான் **அறிவியல்** வளர்ந்தது.

கடல் வழி கண்டு **வணிகம்** பெருக்கினான் **கணிதம்** வளர்ந்தது பிரபஞ்சம் பார்த்தான், **வானிலை** அறிந்தான் வான சாஸ்திரம் வளர்ந்தது. நோய் நாடி சிகிச்சை கண்டான். **மருத்துவம்** வளர்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகின் வரலாறு என்பது பல கோடி ஆண்டுகளின் வரலாறு; ஏழு கண்டங்களின் வரலாறு.

## நவீன உலகின் நாகரிக வாழ்வு

மறுமலர்ச்சி இயக்கமும் , விவசாயப் புரட்சியும் தொழிற்புரட்சியும் உலகினை நவீனமாக்கின.

இலக்கியம் ஓவியம்,கலை, அரசியல் அறிவியல் ஆகிய அனைத்துத் துறைகளும் புத்துயிர் பெற்றன. புதிய சிந்தனை தோன்றியது

மதச் சீர்திருத்த இயக்கம் பரவியது. உளவியல் வளர்ந்தது, மருத்துவத்துறை முன்னேறியது.புதிய கடல் வழிகள் காணப்பட்டு வணிகம் வளர்ந்தது. அத்துடன் புதிய குடியேற்றம் காணப்பட்டது.

இந்திய கடல் வழி வாஸ்கொடகாமாவால் கண்டுபிடிக்கப்பட்டு கிழக்கும் மேற்கும் இணைந்தன.

அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டு, செல்வவளம் மிக்க கண்டத்தில் அமெரிக்கா, கனடா, மெச்சிக்கோ உருவாகின. ஆப்பிரிக்கா ஆராயப்பட்டது, ஆஸ்திரேலியா கண்டு பிடிக்கப்பட்டது.

கடல் அரசியான இங்கிலாந்து உலகில் செல்வாக்கு பெற்றது பிரான்ஸ் -ஜேர்மனி -இத்தாலி ஆகிய நாடுகளின் ஐரோப்பிய காலணிகள் உதயமாகி பிறகு எதிர்ப்பு வலுத்து சுதந்திரம் பெற்றன.

சுதந்திரம் -சமத்துவம் -சகோதரத்துவ உணர்வுகள் தழைத்து உலகம் மாறியது .

அறிவியல் உலகை இணைத்தது. இரண்டு பெரும் உலக போர்கள் அழிவை ஏற்படுத்தி, பிறகு அமைதி பற்றி சிந்திக்க வைத்தன. வல்லரசுகளின் ஆதிக்கம் பெற்று இன்றும்நிலைக்கிறது.

இன்றும் போர் விலகாத சூழ்நிலை நிலவுகிறது. அறிவியல் அழிவுக்கருவியாய் மாறும் அபாயக் கட்டம் வந்துள்ளது.

அறிவியல் அழிவுக்கருவியாய் மாறும் அபாயக் கட்டம் வந்துள்ளது. பிளேக்-காலரா -பெரியம்மை ஒழிக்கப்பட்டு நிம்மதி பிறந்த வேளையில் புற்றுநோய் வந்தது. அதனை கட்டுப்படுத்தும் காலக்கட்டத்தில் எய்ட்ஸ் என்னும் எரிமலை மனித குலத்தை அச்சுறுத்துகிறது. தற்போது கொரோன வந்து உலகையே ஸ்தம்பிக்க செய்தது.

இப்படி நாகரிக வாழ்வின், வளர்ச்சியின் பரிணாமம் தான் உலக வரலாறு. இது பற்றி தொடர்ந்து பார்ப்போம்........................

### படித்துப்பார்

சூரியன் உதிப்பதற்கு முன்
நீ எழுந்திட வேண்டும்
அவனைப் போல் நீயும்
ஒளிரவேணும் என்றால்

எறும்பின் சுறுசுறுப்பை நீ
படிக்க வேண்டும்
அவற்றை போல் நீயும்
சுறுசுறுப்பாய் வாழ வேண்டும் என்றால்

காகத்தின் ஒற்றுமையை நீ
கற்க வேண்டும்
அவற்றை போல் நீயும்
ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றால்

நாயின் நன்றியை நீ
படிக்க வேண்டும்
அவற்றை போல் நீயும்
நன்றியுடன் வாழ வேண்டுமென்றால்

யானையின் பலத்தை நீ
படிக்க வேண்டும்
அவற்றை போல் நீயும்
பலத்துடன் வாழ வேண்டுமென்றால்

**நல்ல மனிதனாய் உணர்ந்து நட!**

ப. பிரதிகா
யா/வட்டு இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-மிதுஷா பாலகிருஷ்ணன் -

**மண் வாசனையுடன் கலந்த குளிர் காற்று நூலகத்தின் ஜன்னல் ஊடாக.....**

என் உடலை வருடிக்கொண்டிருக்க நாற்காலியில் காலை அந்தரத்தில் தொங்க விட்டுக் கொண்டு அந்த அமைதியான சூழலில் ஓர் சிவப்பு நிற கம்பளி உறை இடப்பட்ட புத்தகத்தை திறந்து கொண்டிருக்கிறேன். அப்புத்தகம் "ஜோசப்பிற்கு கிடைக்க இருக்கும் புதையல்" என தலைப்பிடப்பட்டிருந்தது. நான் அதை திறந்து அதன் முதலாவது பக்கத்தை வாசிக்கும் போது "ஏய் ! ஜோசப் " என்று ஓர் தடித்த குரல் எனது முதுகுப் புறத்தில் இருந்து ஒலிக்க எனது உள்ளத்தில் ஏற்பட்ட ஓர் பயம் திடீரென என்னை உலுப்பியது.

திடீரென கண் விழித்து பார்த்தேன். அப்போதுதான் உணர்ந்தேன் நான் சற்று முன் உணர்ந்தவை எல்லாம் எனது கனவில் தோன்றியவை என்று. மீண்டும் அம்மாவின் சேலையை இறுகப் பற்றிக் கொண்டு கண்ணயர்ந்தேன்.

ஜோசப் ஆறு வயது நிரம்பிய மீனவ குடும்பத்தை சேர்ந்த பாலகன்.தாய் எலிசபெத், தமக்கை அலீனா, ஜெசி என்னும் வெள்ளை நிற நாய்க்குட்டி, தென்னோலையால் வேயப்பட்ட அவனது குடிசை வீடு, பாடசாலை இவை மட்டுமே அவனது உலகம்.

வழமை போல காலை 6 மணி ஜோசப் புற்பாயில் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க "தம்பி எழும்பு " என்று அலீனா தட்டி எழுப்பினாள். இருவரும் தேநீர் அருந்திக் கொண்டு வெளியே அமர்ந்து கடலின் அழகை இரசித்துக் கொண்டிருந்தனர். சூரியன் மெல்ல மெல்ல தனது கரங்களை அடி வானத்தில் இருந்து வெளியே நீட்டிக்கொண்டிருந்தான். அந்த மங்கிய வெளிச்சத்தில் கையில் மின்சூளுடன் தலையின் மேல் ஓர் மீன் கூடையுடன் எலிசபெத் வருவதைக் கண்டு இருவரும் "அம்மா ", "அம்மா" என ஏக்க குரலுடன் ஓடிச் சென்று அவளை அணைத்துக் கொண்டார்கள். எலிசபெத் கூடையை தரையில் இறக்கி வைத்து விட்டு, அவர்கள் இருவரையும் தடவிக் கொடுத்து "சீக்கிரமாக பாடசாலை செல்லத் தயாராகுங்கள்" என்றார்.

இருவரும் வழமைபோலப் பாடசாலைக்கு தயாராகித் தாயிடம் இருந்து விடை பெற்று சென்றனர். பாடசாலையின் ஆரம்ப மணியோசையுடன் பாடசாலை ஆரம்பமானது. கதிரவன் கிழக்கு திசையில் இருந்து நகர்ந்து நடுவானை அடைந்தான். திடீரென தோன்றிய கரு மேகங்கள் சூரியனை நான்கு திசைகளில் இருந்தும் ஆக்கிரமித்துக் கொண்டன. மழை மேகங்களின் வருகையும் இடி மின்னல்களின் தாக்குதல்களும் தரம் 6ம் வகுப்பின் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கு இடையூறாக இருந்தன.

சுகாதார பாட ஆசிரியரின் கட்டளைக்கிணங்க வகுப்பு மாணவர்களை ஒழுங்கு படுத்தி வரிசையாக நூலகத்திற்கு அழைத்து சென்றான் வகுப்புத் தலைவன் பிரேம்.

எறும்பு வரிசை போல ஒழுங்காக ஒன்றன் பின் ஒன்றாக அனைத்து மாணவர்களும் நூலகத்தை நோக்கி நடக்க, நடைபாதையில் மழைத்துளி விழ ஆரம்பித்தன. பெரு மழையில் இருந்து தப்பிப்பதற்கு ஓட ஆரம்பித்தனர் சிறார்கள். வரிசையின் நடுவில் சென்ற ஜோசப் எதிரில் இருந்த வாய்க்கால் நீரினுள் தனது ஒரு கால் நனைந்தது கூட பொருட்படுத்தாது. நூலகவாசலை அடைந்தான்.



# மர்மப் புத்தகமும் ஜோசப்பும்

பின் தனது ஒரு காலுறை ஈரலிப்பாக இருந்ததை உணர்ந்த ஜோசப் இரு காலுறைகளை கழற்றி காலணியினுள் நுழைத்து விட்டு வெறுமையான கால்களை துடைப்பத்தில் நன்கு துடைத்து நூலகத்திற்குள் நுழைந்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தான்; நூலக எல்லா இருக்கைகளும் நிரம்பப்பட்டிருக்க யன்னல் ஓரமாக ஓர் நாற்காலி வெறுமையாக இருந்தது. நாற்காலியில் அமர்ந்தவன்.தனக்கு எதிரே இருந்த புத்தகத்தைப் பார்த்தவுடன் அவனது இரு கண்களும் விரிந்து ஆச்சரியத்துடன் எழுந்து நின்றான்.

அவன் எதிரே இருந்தது சிவப்பு நிற கம்பளியிடப்பட்ட **"ஜோசப்பிற்கு கிடைக்க இருக்கும் புதையல் "** என்ற புத்தகம் ......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம்பழமும் நானும்

நானும் என் தங்கையும் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தோம். அப்போது "தொப்" என்ற சத்தம் கேட்டது. இருவரும் சென்று பார்த்தோம் அங்கு பனை மரத்தின் கீழ் பனம்பழம் ஒன்று விழுந்திருந்தது.

அதனை நான் எடுத்துக்கொண்டு அம்மாவிடம் கொடுத்தேன் என் அம்மா அதனை தோல் உரித்து பிழிந்து அச்சாற்றை நெருப்பில் காய்ச்சி மாவுடன் கலந்து எண்ணெயில் போட்டு பொரித்து "பனங்காய்ப் பணியாரம்" என்று சொல்லித் தந்தார். நாங்கள் அதை சுவைத்து சாப்பிட்டோம். அது மிகவும் இனிமையாக இருந்தது. தினமும் விழும் பனம்பழங்களை பொறுக்கி என் அம்மா அதை பிழிந்து ஓலை பாயில் வெயிலில் காய விடுவார்.

அதை "பனாட்டு" என்று சொல்லுவார். மழைக்காலங்களில் அதை தேத்தண்ணியுடனும் தருவார். அது உடம்புக்கு சத்து என்று என் பாட்டி சொல்லுவார். பனாட்டு செய்த மீதி பழங்களை சேகரித்து பாட்டி அப்பாவிடம் பாத்தி போடச் சொல்லுவார் . சில பழங்களை பொறுக்கி நானும் தம்பியும் வைப்போம். பின் அதை வெட்டி பூரனாக சாப்பிடுவோம். அதில் ஒட்டியிருக்கும் மண்ணையும் தூசியையும் ஊதி சாப்பிடுவதே ஒரு தனிக்கலை தான்.

என் அப்பாவும் பாத்தி போட்டு சில மாதம் கழித்து அதை பிடுங்குவர். அதை கிழங்கு என்றுசொல்லுவர். அம்மா அதை தண்ணியில் போட்டு நெருப்பில் அவிப்பார். அதனை மிளகு, உப்பு இடித்து தொட்டு சாப்பிடும்போது அவ்வளவு சுவையாக இருக்கும்.

மீதி கிழங்குகளை பாட்டி சீவி வெயிலில் காய விடுவார். அவித்த கிழங்குகளையும் அவிக்காத கிழங்குகளையும் பாட்டி சீவி வெயிலில் காய விடுவார் அவித்த கிழங்கை புழுக்கொடி என்றும் அவிக்காத கிழங்கை ஒடியல் என்றும் சொல்லுவார். அதை மாவாகவும் திரிப்பர். புழுக்கொடியல் மாவை தேங்காய், பனங்கட்டி போட்டு குழைத்து உருண்டையாக பிடித்து தேத்தண்ணியுடன்எங்களுக்கு அம்மா தருவார்.

அது உடம்புக்கும் ஆரோக்கியம் என்றும் சொல்லுவார். மழைக்காலத்தில் மழையில் நனைந்து காய்ச்சல், தடிமன் வந்தால் ஒடியல் மாவில் நண்டு இறால் போட்டு கூழ் காச்சி தருவார். அதை குடித்தால் காய்ச்சல், தடிமன் பறந்து போகும்.

நானும் பனைமரத்திலிருந்து விழும் பனம்பழத்திலே இவ்வளவு நன்மை என்றால் பனைமரத்தில் இன்னும் நிறைய நன்மை இருக்கும் என நினைத்தேன் உடனே பாட்டியிடம் சென்று பனைமரத்தின் நன்மைகளைக் கேட்டேன். கள்ளெடுத்து அப்பம் சுடும் மாவில்கலந்து அப்பம் சுட்டுச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும் என்று சொன்னார்

பின் தனிப்பனை கள் எடுத்துக் குடித்தால் மிகவும் இனிமையாய் இருக்கும் என்றார். அதற்குள் அப்பா வந்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம் தான் என்றார். யாழ்ப்பாணத்தில் பனம்பொருள் திணைக்களம் நீண்ட காலமாகச் செயற்படுகிறது. அங்கு இவை உற்பத்தி செய்யப்படுகிறது.

தம்பியும் **"அதெப்படி கள் மதுவாக மாறும்"** என்றான். அதற்கு அக்கா உடன் கள்ளில் மதுவம் இருக்காது. நேரமாக ஆக மதுவம் அதிகரித்து நொதிக்க ஆரம்பித்து, இரசாயனமாற்றமடையும். அதனைப் பதப்படுத்திப் போத்தலில் அடைத்து விற்பர் என்றார்.

என் அப்பாவும் சிறுவர்கள் முதல் பெரியவர் வரை குடித்து அழியும் மதுவே இதுதான் என்றார்.

என் அக்காவும் அளவோடு குடித்தால் மருந்தாக பயன்படும், 'அளவுக்கு மிஞ்சினால் அழிவுதான் இதைத்தான் அன்றே பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்று' இப்ப அதெல்லாம் யார் கேக்குறாங்க" என்று கூறியபடியே உள்ளே சென்றா. என் தம்பியும் "ஒருக்கா அதை குடிச்சு பாப்பம்" என்று சொன்னான். அதற்கு அப்பா அதன் விளைவுகளை விளங்கப்படுத்திப் புரிய வைத்தார்.

**- லக்சியா சண்முகராசா -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் தலையாட்டியபடி உள்ளே போனான். பாட்டியும் "ஏன் தம்பி பிள்ளையை பேசுற சின்ன பிள்ளைதானே விளையாட்டில சொல்லிருப்பான். இதுக்கு போய் ஏன் அவனை பேசுகிறாய்?" என்றார்.

"அது தப்புமா, சின்னவயசில இப்படியான வார்த்தை வரும்போதே கண்டிப்பதும், புரிய வைப்பதும் பெற்றோரின் கடமை. இதை செய்யாததால்த்தான் நிறைய சின்ன பிள்ளைகள் கெட்டு சீரழியுதுகள். அது தவறான பழக்கம் இப்படித்தான் ஆரம்பித்து கடைசில எல்லோரும் அதற்கு அடிமையாகிறார்கள். இதனால் தான் சிறுவர்களும் தவறான பாதையில் போகிறார்கள்" என்று சொன்னார். பாட்டியும் "அது சரிதான் தம்பி" என்றார். பின் பாட்டி கதையைச் சொல்லத் தொடங்கினார். அந்தக்கள்ளை எடுத்து "பனங்கட்டி" செய்வார்கள். "அதுதான் ஆடிப்பிறப்பிலே கூழ் காச்சும்போது போடுவமே அதுவா பாட்டி" என்று கேட்டேன்; பாட்டியும் ஓம் அதுதான் ஆனால் அந்தப் பானைக்குள் சுண்ணாம்பைத் தடவுவார்கள் என்று சொன்னா.

"நுங்கு" வெட்டி குடிக்கலாமென்றார். என் அப்பாவும் எங்களுக்கு "நுங்கு" வெட்டி தருவார். அது நினைவுக்கு வந்தது. என் பாட்டியும் மிகவும் சுவாரஸ்யமாகக் கதையை சொன்னார். பனை மரத்தின் ஓலைகளை வெட்டி கூரையாக மேய்வர் என்றும் அவ்வோலையை வேலியாகவும் அடைப்பர் என்றும் சொன்னார்.

பின்னர் ஓலையுடன் வரும் மட்டைகளை வெட்டி வேலியாகாவும் அடைக்கலாம், அட்டாளையும் கட்டலாம் வீட்டுக்கும் அடைப்பர் என்றும் சொன்னார்.

அதுமட்டுமன்றி பனை ஓலையைப் பயன்படுத்தி என் பாட்டி நீத்துப்பெட்டி, கடகம், ஓலைப்பாய் என்பன இழைப்பார். தினமும் எங்கள் வீட்டில் ஓலைப்பாயில் தான் படுத்து உறங்குவோம். மேலும் என் பாட்டி பனை மரத்திலிருந்து காய்ந்து விழும் பாளை, கொக்கறை என்பனவற்றை எரிக்கவும் பயன்படுத்தலாம் என்றார்.

பனையைத் தறித்தால் வீட்டுக்கு கூரை போடப் பயன்படும் கிணற்றில், தண்ணீர் அள்ளத் துலாவாகவும் பயன்படும் என்றார்.

நானும் ஒரு பனைமரத்தில் இத்தனை நன்மைகளா? எனக் கேட்டு திகைத்து நின்றேன். அன்றிலிருந்து பனைமரத்தை நேசிக்க ஆரம்பித்தேன் நீங்களும் என்னுடன் நேசித்து அதன் பயன்களைப் பெறுங்கள்.

**பனை ஓர் கற்பகதரு**

● ● ● ●



**நட்பு**

அழகில் ஓவியமாம் நட்பு தேன்போல்
சொட்டுது இப்பாரினிலே....
வாரி அணைத்துப் பார் இவ்வையகத்தில்
வாழ்ந்திடுவாய் வசந்தமாய்.....

கீழே விழும்போது கை கொடுத்து
கரம் தூக்கிடுமே....
கீழே விழாமலும் கை தாங்கி
பிடித்திடுமே....

ஆறுதல் படுத்திடும் ஆனந்தமும்
அதுவே ....
அள்ளி அணைத்திடும் அரவணைப்பும்
அதுவே....

வஞ்சகம் இல்லாமல் அன்பை
பொழிந்திடுமே
சாதி பேதம் பாக்காமல் காலமெல்லாம்
வாழ்ந்திடுமே....

ப.பிரியந்தி
யா/ மூளாய் அ.மி. த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைநாள்

அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்கு ஆயத்தமானேன். எனது வெள்ளை சட்டையையும், கழுத்துப்பட்டியையும், காலிலே சப்பாத்து மற்றும் காலுறையையும் அணிந்து கொண்டு மெதுவாக வீட்டுவாசலிற்குச் சென்றேன்.

அப்போது பளிச்சென்று கண்ணிமைக்கும் நொடிப்பொழுதில் ஒளிக்கதிர் ஒன்று வீசிச்செல்லக் கண்டேன். என்னடா! இது என்று வானைப் பார்க்கும் வேளையில் "சடசட" என்று முழக்கச் சத்தம் என் காதை கிழித்துக் கொண்டு சென்றது.

ஒருகணம் பூமி அசைவின்றி நின்றது போல் உணர்ந்தேன். "அம்மா ....." என்று அலறி அடித்துக் கொண்டு வீட்டிற்குள் ஓடிப்போய் ஒளிந்து கொண்டேன்.

அப்போது "சோ" என்ற சத்தத்துடன் மழை பொழியத் தொடங்கியது. மெதுமெதுவாக வீட்டின் வாசல் அருகே சென்று பார்த்தேன். புயல் காற்றுடன் மழை பொழிந்து முற்றத்திலே வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது.

அச்சச்சோ என்ன செய்வேன் பாடசாலைக்கோ நான் செல்லவேண்டுமே ஆனால் இந்த மழையோ நிற்பதாக இல்லை.

அப்போதுதான் அப்பா வாங்கித் தந்த கறுத்த குடை ஞாபகத்திற்கு வந்தது. உடனே அதை எடுத்து கொண்டு பாடசாலை செல்வதற்கு வாசல் அருகே வந்தேன்.

அவ்வளவு தான் எனது சப்பாத்துகள் இரண்டும் வெள்ளத்தில் நனைந்து விட்டன. சப்பாத்துக்களைக் கழற்றி செருப்பைக் காலிலே அணிந்து கொண்டு ஒரு கையிலே எனது கறுத்தக் குடையையும் மறுகையிலே புத்தகப்பையையும் காவியவாறு வீட்டிலிருந்து புறப்பட்டேன்.

வீதியெங்கும் வெள்ளம் பாய்ந்தமையால் நிலம் சேறும் சகதியுமாக காணப்பட்டது.

சேற்றுக்குள் கால் புதையாதவாறு அங்கும் இங்கும் மெதுவாகத் தாவித் தாவிச் சென்றுகொண்டிருந்த போது தவறுதலாகச் சேற்றினுள் விழுந்து விட்டேன்.

அவ்வளவுதான் எனது வெள்ளை சட்டையோ கறுத்த சட்டையாக மாறிவிட்டது. அப்பா எனக்கு வாங்கித் தந்த புதுக்குடையும் சேற்றினுள் விழுந்து கம்பி முறிந்து விட்டது. நான் அழுது கொண்டே வீட்டை நோக்கி ஓடி விட்டேன்.

எவ்வளவு காலம் சென்றாலும் என்மனதை விட்டு அகலாத மழைநாள் என்றால் அன்றைய வெள்ளிக்கிழமை தான்.மழை என்றாலே அந்நாள் தான் ஞாபகத்திற்கு வரும்.



சிவகுமாரன் அக்சஜா (தரம்-05 )
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

### சிந்திக்க சில நேரம் ...

**5. ஒரு குரங்கு 20 அடி உயரம் உள்ள மரத்தில் ஏறத் தொடங்கியது.குரங்கு ஒரு மணி நேரத்திற்கு 3 அடி ஏறுவதும் 2 அடி சறுக்குவதுமாய் இருந்தது.மரத்தின் உச்சியைச் சென்றடைய குரங்கிற்கு எத்தனை மணி நேரம் தேவைப் பட்டிருக்கும்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடக குண்டுச்சட்டிகளும் சளைக்காமல் ஓடும் எமது குதிரைகளும்

-மு. மயூரன்

சமூக வலைத்தளங்கள் அறிமுகமான புதிதில் அவை எல்லைகள் தாண்டிய தொடர்பாடலுக்கும் கருத்து வெளிப்பாட்டுக்கும் தகவல் பரிமாற்றத்துக்கும் கிடைத்த ஒப்பற்ற-கட்டற்ற வெளிகளாகவே பார்க்கப்பட்டன.

சமூகத்தடைகள், அரசுகளின் கண்காணிப்பு, செய்தித் தணிக்கைகள், பெரும் ஊடக நிறுவனங்களின் ஏகபோகம் போன்றவற்றை எல்லாம் தகர்த்தெறிந்து மனிதர்கள் தங்குதடையில்லாமல் கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு பெரும் வாய்ப்பாக இந்த சமூக ஊடக வெளி கருதப்பட்டது.

அரசியற் கருத்துகளைப் பரப்பவும் போராட்டங்களை ஒழுங்குபடுத்தவும் அதிகார பீடங்களை அம்பலப்படுத்தவும் அரசுகளையே ஆட்டங்காண வைக்கவும் இந்த சமூக வலைத்தளங்கள் ஓர் ஆயுதம் போல் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

மரபான எதிர்ப்பு வடிவங்கள், போராட்ட முறைகளை எல்லாம் கைவிட்டு, சமூக வலைத்தளங்களூடாக நீதிகேட்டுப் போராடுவது என்பது ஒரு புதுமையான, நாகரிகமான சமூக-அரசியல் செயற்பாடாக எல்லா இடங்களிலும் கூறப்பட்டன. தமிழ் திரைப்படங்கள் பலவற்றிலும் கூட இந்தக் கருத்து மீண்டும் மீண்டும் அழுத்தமாக முன்வைக்கப்பட்டது.ஆனால் இதுவெல்லாம் உண்மைதானா? அரசுகளும் அதிகார பீடங்களும் அஞ்சி நடுங்குமளவுக்கு இந்த சமூக ஊடகங்கள் பலம் வாய்ந்த கட்டற்ற வெளிகள் தானா?

இந்த இடத்தில் தான் நாம் சமூக ஊடக *Algorithm* கள் (*Algorithm* - படிமுறைத்தீர்வு) பற்றி கொஞ்சம் கதைக்கவேண்டியிருக்கிறது.

சமூக வலைத்தளங்களில் பொதுவானதும் முக்கியமானதுமான கூறு அதன் 'ஓடை' (*feed*) ஆகும். முகநூலையோ, யூடியூப் இனையோ *X (Twitter)* இனையோ இன்ஸ்டகிராமையோ திறந்தால் அதன் "ஓடையை" தான் நீங்கள் காண்கிறீர்கள். மற்றவர்கள்என்னவெல்லாம்பகிர்ந்திருக்கிறார்கள் என்பதை அவ் ஓடை உங்களுக்கு வரிசையாக் காண்பிக்கும்.

அனைவரும் பகிரும் அனைத்தையும் உங்களுக்கு காண்பித்தபடியிருந்தால் அவ் ஓடை வெறும் குப்பையாகவே இருக்கும். உங்களுக்கு ஆர்வத்தை தூண்ட வேண்டுமென்றால், நீங்க காண விரும்பும் பகிர்வுகளையே உங்ளுக்கு காண்பிக்க வேண்டும். அப்போது தான் மீண்டும் மீண்டும் நீங்கள் குறித்த சமூக வலைத்தளத்தை திறந்து பார்ப்பீர்கள்.

நீங்கள் எதனை காண விரும்புகிறீர்கள் என்பதை எப்படி கண்டுபிடிப்பது?

அதற்குத்தான் சமூக வலைத்தள மென்பொருட்கள் *Algorithm*களை பயன்படுத்துகின்றன (தற்போது செயற்கை நுண்ணறிவின் துணையுடன் இது மேலும் சிறப்பாக தொழிற்படுகிறது).

நீங்கள் எவற்றை திறந்து பார்க்கிறீர்கள், எவற்றை பார்க்கவில்லை, எவற்றுக்கு விருப்பக்குறியிடுகிறீர்கள், எவற்றுக்கு பின்னூட்டமிடுகிறீர்கள், எவரோடு அதிகம் தொடர்பாடுகிறீர்கள் என்பதையெல்லாம் இந்த *Algorithm*கள் கவனத்திலெடுத்து, உங்களது ஓடையில் எவற்றை காண்பிக்கவேண்டும் எவற்றை காண்பிக்கக்கூடாது என்ற முடிவினை எடுக்கின்றன.

"தனிப்பயனாக்கப்பட்ட ஓடை"யினை (*personalized feed*) இதன் மூலம் உங்களுக்கு அவற்றால் தர முடிகிறது. உங்களுக்கும் அது பிடித்துக்கொள்கிறது. சமூக வலைத்தளங்கள் உங்களுக்கு ஆர்வமூட்டுவதாக மாறுகிறது. ஆனால் இதில் ஒரு சிக்கல் உள்ளது.

அரசுகளாலும் அதிகார பீடங்களாலும் முடிவு செய்ய முடியும்.இந்த *Algorithm*களை அரசுகளும் அதிகாரபீடங்கும் தமக்கு சாதகமாக பயன்படுத்த முடியும். பயன்படுத்தவும் தொடங்கிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு பிடித்தமானவற்றை உங்களுக்கு காண்பிப்பதற்கான வழிமுறை உள்ளதென்றால், உங்களுக்கு எதனை காண்பிக்க வேண்டும், எதனை காண்பிக்கக்கூடாது என்று தீர்மானிக்க அதே வழிமுறையைக் கையாள முடியும். இச் சமூக வலைத்தளங்கள் அரசுகளுடைய சட்டதிட்டங்களின் படி சில பதிவுகளை தணிக்கை செய்கின்றன, தடையும் செய்கின்றன.

நாம் எதனை சிந்திக்கவேண்டும், எதனை தெரிவு செய்ய வேண்டும், எம்முடைய ஆதரவு யாருக்கு என்பதை எல்லாம் இந்த வழிமுறையைக்கொண்டு படிப்படியாக நீங்கள் உங்களுக்கு வசதியான குமிழி ஒன்றினுள் சிக்கிவிடுகிறீர்கள். உங்களோடு ஒத்த கருத்துடையவர்கள், நீங்கள் விரும்புபவர்கள், உங்களுக்கு உவப்பானவற்றை பகிர்பவர்கள், உங்களுக்கு உவப்பான பகிர்வுகள் மட்டுமே கொண்ட குமிழி ஒன்று உங்களைச்சுற்றி எழுகிறது.

அது ஒரு குண்டுச்சட்டி போல உங்களைச் சுற்றி வளர்கிறது. நீங்கள் எங்கு திரும்பினாலும் அந்த குண்டுச்சட்டியின் சுவரினையே உங்களால் காண முடியும். நீங்கள் சொல்வதே மீண்டும் மீண்டும் உங்களுக்கு எதிரொலித்தபடியிருக்கும்.

எங்கள் கருத்துக்குதிரைகளை எவ்வளவு வேகமாக தட்டி விட்டாலும் எமது செயற்பாட்டுக்குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடினாலும் அவை அந்தக் குண்டுச்சட்டியினையே சுற்றிச்சுற்றி வருகின்றன. சட்டிக்கு வெளியே உள்ள எதுவுமே எம்மை வந்தடையாமல் போய் விடுகின்றன.



இந்தக்குண்டுச்சட்டி தான் உலகம் என நாம் நம்பத்தொடங்குகிறோம். எடுத்துக்காட்டாக, நீங்கள் குறித்த மதத்தை தீவிரமாக பின்பற்றுபவர் என்றால், உங்களைச்சுற்றியுள்ள அனைவரும் அம் மதக்கருத்துக்களையே உரையாடுகிறார்கள் என்பது போன்ற தோற்றத்தை சமூக வலைத்தளங்கள் தரத்தொடங்குகின்றன. மாற்று மதங்கள் பற்றிய உரையடால்களும் பதிவுகளும் மிகக்குறைவாகவே உங்களை வந்தடையும்.

சமூக வலைத்தளங்களின் பலம், சாத்தியங்கள் பற்றி நாம் அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்துவிடக்கூடாது. *Filter Bubbles* எனப்படும் இந்த குண்டுச்சட்டிகளைப் பற்றி நாம் விழிப்போடு இருக்கவேண்டும்.

உண்மையிலேயே எம்மைச்சுற்றியுள்ள சமூகம் எப்படி இருக்கிறது, எப்படிச் சிந்திக்கிறது, என்ன கருத்துக்களை கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் அறியவேண்டுமென்றால் நாம் மெய்யான சமூகத்தில் இறங்கி ஆய்வுகள் செய்வதே அர்த்தமுள்ளதாயிருக்கும். சமூக மாற்றத்துக்காக பணியாற்றுவதற்கு நாம் சமூக வலைத்தளங்களில் அளவுக்கதிகமாக தங்கியிருக்காமல், வெளியே மெய்யான மக்களோடும் சமூக அமைப்புகளோடும் இணைந்து பணியாற்றுவதே வினைத்திறன் மிக்கதாயிருக்கும். .

## கரும்புள்ளிச் செவ்வண்டினம்

• வண்டுகள் வரிசையினைச் சேர்ந்த கணுக்காலி குடும்பம் ஆகும்.

• பெரும்பாலும் சிவப்பு, செம்மஞ்சள் அல்லது மஞ்சள் நிறத்தில் காணப்படும். இவ்வண்டுகளின் சிறகில் கரும்புள்ளிகள் காணப்படுகின்றன.

• இந்த வண்டினங்கள் தோட்டங்களுக்குப் பயனுடையவை.

• இது இங்கிலாந்தில் 'லேடிபர்டு' *(lady-bird)* என்றும், அமெரிக்காவில் "லேடிபக்" *(ladybug)* அல்லது "லேடிக்கௌ" *(ladycow)* என்றும் அழைக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவி (First Aid)

- ஜெயச்சந்திரன் தயிந்தன் -

விபத்துக்கள் ஏற்படும் பொழுது அவர்களுக்கு மருத்துவர்கள் முறையான சிகிச்சையை அளிக்க முன்னர் பொதுமக்களால் அளிக்கப்படுவதையே முதலுதவி என்போம். எமது வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் சில முதலுதவி முறைகளை அறிந்து கொள்வது அவசியமாகும். இது ஆபத்து வேளைகளில் நமக்கும் பிறருக்கும் உதவும்.

விபத்திற்கு உள்ளானவரின் உயிரைக் காப்பாற்றுவதே முதல் நோக்கமாகும்.

அவர்களுக்கு நம்பிக்கையையும், துணிவையும் ஏற்படுத்த வேண்டும். முதலுதவி வண்டிக்கு அழைத்து இடத்தை தெளிவாக கூறவேண்டும். கால தாமதம் காலனை அழைக்கும் என்பதால் அங்கே உடனடியாகக் கிடைக்கும் அல்லது இருக்கும் வசதிகளை வைத்து எப்படி உதவலாம் என்ற சமயோசித புத்தியுடன் சாமர்த்தியமாகச் செயல்படும் வேகமும் வேண்டும். ஆபத்து அதிகம் என்றால் உடனே மருத்துவரை அழைப்பது தான் சிறந்த முதலுதவி ஆகும்.

நாம் இப்போது சில விபத்துக்களுக்கு எவ்வாறு முதலுதவி செய்யலாம் என்பதை பார்ப்போம்.

### 1. அடிபடுதல்

உயரமான மரம் அல்லது கட்டடத்திலிருந்து யாரேனும் விழுந்துவிட்டால், உடனே ரத்தம் வருகிறதா என்று பார்க்க வேண்டும். ரத்தம் வந்தால், ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும். ரத்தம் வெளியே வராவிட்டாலும் உள்ளே ரத்தக் கசிவு இருக்கலாம். அப்படி இருந்தால் மயக்கம் வரும். குளிரும்.

அவரைக் கீழே படுக்க வைத்து, கால்கள் இரண்டையும் மேலே சிறிது உயரமாகத் தூக்கி வைக்க வேண்டும். அவரைத் தூக்கும்போது, கழுத்தின் நிலையைக் கவனமாகப் பார்த்துக் தூக்க வேண்டும், ஏனெனில், தண்டுவடம் பாதிக்கப்பட்டால், பிறகு ஆயுள் முழுவதும் பிரச்சனையாகிவிடும்.

கால்களை மடக்கியபடி விழுந்திருந்தால், காலை நீட்ட முயற்சிக்க வேண்டாம். உட்கார வைக்காமல், படுத்த நிலையில் தான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். வாயில் ரத்தம் வந்தால், துப்பச் சொல்லலாம். விழுங்கக் கூடாது.

விழுந்தவர் பெண்ணாக இருந்தால், அவர் கர்ப்பிணியா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

### 2. ரத்தக்காயம் / வெட்டுக்காயம்

காயம்பட்ட இடத்தை, குழாயிலிருந்து வரும் சுத்தமான நீரால் *(running water)* கழுவ வேண்டும்.

சோப் போட்டுக் கூடக் கழுவலாம். காயம்பட்ட இடத்தில் ரத்தம் வந்தால், சுத்தமான துணியால் அழுத்திக் கட்டுப்போட வேண்டும். பவுடர், சந்தனம், மஞ்சள், காப்பித் தூள் என்று எந்தப் பொருளையும் காயத்தின் மீது போடக் கூடாது.

குழந்தைகளுக்கு உடலில் வலுக்குறைவு என்பதால், வெட்டுக்காயம், பூச்சிக்கடி போன்ற எந்த விபத்தாக இருந்தாலும், அவர்களால் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. எனவே முதல் உதவிக்குப் பிறகு, உடனே மருத்துவமனைக்குச் சென்று விட வேண்டும். அலட்சியமாக இருக்கக் கூடாது.

அங்கே உடனடியாகக் கிடைக்கும் அல்லது இருக்கும் வசதிகளை வைத்து எப்படி உதவலாம் என்ற புத்தியுடன் சாமர்த்தியமாகச் செயல்படும் வேகமும் வேண்டும்.

சிறிய காயம், கத்தி அல்லது பிளேடால் ஏற்பட்ட வெட்டுக் காயம், கீழே விழுந்து அடிபட்டது என ரத்தக் கசிவு எப்படி ஏற்பட்டாலும், எங்கிருந்து ரத்தம் வருகிறது என்பதை முதலில் கண்டறிந்து, ரத்தம் வருவதை நிறுத்த வேண்டும். வாய், மூக்கு, கை, கால், நெற்றி என எங்கிருந்து ரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும் சுத்தமான துணியை வைத்து அழுத்தி, ரத்தத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஒருவேளை ரத்தம் மூக்கிலிருந்து வந்தால், அவரை முன்னோக்கிக் குனியச் செய்து, மூக்கின் மென்மையான முன்பகுதியை, விரல்களால் பிடித்துக் கொண்டு, வாயால் மூச்சுவிடச் செய்ய வேண்டும். மூக்கிலிருந்து வரும் ரத்தத்தை அவர் விழுங்கி விடக் கூடாது. அதனால்தான் முன்னால் குனியச் சொல்கிறார்கள்.

தலையைப் பின் பக்கமாக சாய்த்து விடக் கூடாது. அப்படி சாய்த்தால், ரத்தம் வாய்க்குள் போய், நுரையீரலுக்குள் புகுந்துவிடும் அபாயம் உள்ளது. எனவே நிமிரவே கூடாது.

மூக்கு சிந்தச் செய்யவும் கூடாது.காதிலிருந்து ரத்தம் கசிந்தால், சுத்தமான துணியை வைத்து ரத்தத்தை நிறுத்த வேண்டும். காதுக்குள் எதையும் போட்டுக் குடையக்கூடாது.

*4. கண்ணுக்குள் ஏதாவது விழுந்துவிட்டால்*

கைகளால் தண்ணீரை அள்ளி அள்ளித் தொடர்ந்து பாதிக்கப்பட்ட கண்ணில் அடித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

கையால் கண்ணைக் கசக்கக் கூடாது. விரலை விட்டு எடுக்க முயற்சிக்கக் கூடாது.கண்களில் கண்ணாடி போன்ற கூர்மையான பொருள் குத்தியிருந்தால், கையை விட்டு எடுக்க முயற்சிக்கக் கூடாது. அப்படி எடுத்தால், கண்ணில் ரத்தக் கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடனடியாக கண் நல மருத்துவரை அணுக வேண்டும்.

நேரடி வெளிச்சம், தூசி கண்களில் படாதவாறு, இரண்டு கண்களிலும் சுத்தமான துணி வைத்து, அதன் மேல் பிளாஸ்திரி போட்டு மூடிவிட வேண்டும்.ஒரு கவர் அல்லது பேப்பர் கப் வைத்துக்கூட, கண்களை மூடலாம். அப்படியே கண் மருத்துவரிடம் போய்விட வேண்டும்.

## வாசிப்பு வாழ்க்கையை வளமாக்கும்

**வாசிப்பு மாதத்தை முன்னிட்டு (ஒக்டோபர்)**

வாசிப்பு அன்பின் அடிநாதம்
வாசிப்பு அறிவின் அடையாளம்
வாசிப்பு ஆற்றலின் ஆணிவேர்
வாசிப்பு ஆக்கத்தின் ஆரோகணம்
வாசிப்பு ஆளுமையின் ஆதாரம்
வாசிப்பு இசையின் இருப்பிடம்
வாசிப்பு ஈகையின் ஈர்ப்பு
வாசிப்பு உண்மையின் உறைவிடம்
வாசிப்பு ஊக்கத்தின் ஊற்று
வாசிப்பு எளிமையின் எத்தனம்
வாசிப்பு ஏற்றத்தின் ஏணி
வாசிப்பு ஐஸ்வர்யத்தின் ஜனனம்
வாசிப்பு ஒற்றுமையின் ஒளிக்கீற்று
வாசிப்பு ஓர்மத்தின் ஓடம்
வாசிப்பு வையத்தின் ஔடதம்
வாசிப்பு அஃதே அம்சமானது
வாழ்க !வாசிப்பு வளர்க !வாழ்க்கை
வாசிப்பே நேசிப்பு, நேசிப்பே வாசிப்பு
வாசிப்பே சுவாசிப்பு, சுவாசிப்பே வாசிப்பு.!

ரு.முருகேசு தாயகரன்
அசிரியர்

**6. ஒரு பெரிய குடும்பத்தில் நிறைய சகோதரர்களும் சகோதரிகளும் உள்ளனர் ஒருவனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனரோ அதே எண்ணிக்கையில் சகோதரிகளும் உள்ளனர் ஆனால் ஒரு சகோதரிக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனரோ அதில் பாதி எண்ணிக்கையில் தான் சகோதரர்கள் உள்ளனர். அப்படியென்றால் அவர்களில் சகோதரிகள், சகோதரர்கள் எத்தனையெத்தனை பேர் ?**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்து விட்டது யார்?



முல்லாவிடம் ஒரு பழைய படகு இருந்தது. அப்படகில் ஆற்றின் இந்தக் கரையில் இருந்து அந்தக் கரைக்குப் பயணிகளை ஏற்றி இறக்கிப் பணம் சம்பாத்தித்து வந்தார்.

ஒரு சமயம் அவரது படகில் இலக்கண இலக்கியங்கள் கற்றுத் தேர்ந்த பெரும் புலவர் 'உமக்கு இலக்கணப் புலமை உண்டா' என்று கேட்டார். 'இல்லை ஐயா' என்றார் முல்லா.

'மனிதனாகப் பிறந்த நீங்கள் இலக்கணம் படிக்காமையினால் வாழ்நாளில் பாதியை இழந்து விட்டீர்களே' என்றார் கர்வத்தோடு புலவர். முல்லா பதில் ஏதும் கூறாது படகை செலுத்திக் கொண்டிருந்தார்.

'சரி இலக்கணம் படிக்கவில்லை. இலக்கியம் எதாவது கேட்டிருக்கிறாயா' என்றார், மேலும் கர்வத்துடன் புலவர். 'ஐயா நீங்கள் எல்லாம் கற்ற பண்டிதர். நான் படகோட்டி. எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது' என்றார் முல்லா.

'என்ன காரியம் செய்து விட்டீர்கள் படகோட்டி? வாழ்நாளில் முக்கால் பாகத்தை இழந்து விட்டீர்களே' என்றார் புலவர். இதற்கும் முல்லா ஒன்றும் பேசாமல் மெளனமாகப் படகைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

படகு ஆற்றின் நடுவில் போய்க் கொண்டு இருக்கும் போது அந்தப் பழைய படகில் ஓர் ஓட்டை ஏற்பட்டுத் தண்ணீர் படகினுள் குபு குபுவென்று வேகமாக நுழைந்தது. புலவரை நோக்கி," 'ஐயா உங்களுக்கு நீந்தத் தெரியுமா' என்று முல்லா கேட்டார். 'எனக்குத் தெரியாதே' என்கிறார் புலவர். "இப்போது என்ன செய்வது? உங்கள் வாழ்வில் முழுவதையுமே இழந்து விட்டீர்களே! இன்னும் சில நிமிடங்களில் படகு ஆற்றில் மூழ்கிவிடும்" என்று கூறியபடி முல்லா ஆற்றில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தார்.

பாவம் புலவர்! எல்லாம் தெரிந்து வைத்துள்ளோம் என்ற ஆணவத்தோடு ஆற்றில் மூழ்கி உயிரை இழந்தார்.

# கண்நோய்

இலங்கையில் தற்போது பரவி வரும் கண் நோய் வேகமாக யாழ்ப்பாணத்திலும் பரவிவருகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு சுகாதாரத்துறை அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது. இந்நோய் அடினோ வைரஸினால் பரவுகிறது. இக்கண்ணோய் வீட்டில் ஒருவருக்கு ஏற்பட்டால் 25% ஏனையோருக்கும் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இது ஒருவரின் நேரடி தொடர்பு மூலம் பரவும். ஒருவருக்குக் கண்நோய் ஏற்பட்ட 24 மணித்தியாலம் தொடக்கம் 72 மணித்தியாலங்களில் இன்னொருவருக்குப் பரவ சாத்தியம் உண்டு. இந்நோய் தொற்று ஏற்பட்ட நபருக்கு 5-6 நாட்களில் குணமடையும்.

**வைரஸ் இளம் சிவப்புக் கண்நோய்** 1 முதல் 2 வாரங்களுக்கு நீடிக்கும். இரண்டு கண்களையும் பாதிக்கும். தடிமன் அறிகுறிகளும் இருக்கலாம். கண்ணிலிருந்து வெளியேறும் நீர் பெரும்பாலும் தெளிவானதாக இருக்கும். சுத்தமாக இருத்தல் அவசியம். இதற்கு மருத்துவ சிகிச்சை தேவையில்லை.

**இளம் சிவப்புக் கண்நோயின் அடையாளங்களும், அறிகுறிகளும்.**

1. கண் மற்றும் கண் இமையின் உட்பகுதி சிவந்திருத்தல்.
2. இலேசாகக் கண்ணிமைகள் வீங்கியிருத்தல்.
3. கண்களில் அரிப்பு.
4. கண்களிருந்து தெளிவான அல்லது மஞ்சள் -பச்சை கலந்த நிறத்தில் நீர் வெளியேறுதல்.

**பக்டீரியாவால் உண்டாகும். இளம் சிவப்புக் கண்நோய்** முதலில் ஒருகண்ணை மாத்திரம் பாதிக்கும் பின் பச்சை அல்லது மஞ்சள் நீர் வெளியேறும். கட்டாயம் மருத்துவமனை அணுக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த ஈழத்து சான்றோர்கள்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய முத்தமிழ் என்று சிறப்பிக்கப்படும் தாய்த் தமிழின் சிறப்புக்கள் ஏராளம். இத்தகையச் சிறப்புடைய தமிழை நிலைநாட்டுவதற்காகத் தமது உயிரை அர்ப்பணித்து, தாய்த் தமிழ் வளர்த்த ஈழத்துச் சான்றோர்கள் ஈழத்துத் தமிழின் கண்களாக விளங்கினார்கள்.

நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அறிஞர் சி.வை தாமோதரம்பிள்ளை, சின்னத்தம்பி புலவர், சுவாமி விபுலானந்தர், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என ஈழத்திலே தமிழ் வளர்த்த சான்றோர்களை வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம்.

அதன் அடிப்படையில் ***"யாழ்நூல்"*** என்ற இசை நூலை வெளியிட்டுத் தமிழின் இசைப் பண்பாட்டையும், இறைவன் உவக்கும் இன்மலர்களையும் எடுத்துரைத்து "சைவ சமய வாழ் நெறி" என மக்களின் வாழ்க்கையையும் நெறிப்படுத்தியவர் சுவாமி விபுலானந்தர்.

**" வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது "**

என இறைவன் உவக்கும் இன்மலர்களாகிய உள்ளக்கமலம் காய்ந்தளிர், நாட்டவிழி, நெய்தல் என மும்மலங்களையும் குறிப்பிட்டார் சுவாமி விபுலானந்தர்.

தொடர்ந்து "நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே, சுருதி எங்கே, எல்லவரும் ஏந்து புராணாகமங்கள் எங்கே, பிரசங்கம் எங்கே, ஆத்தறிவு எங்கே அறை" என்று ஆறுமுக நாவலரைப் போற்றினார்.

இவ்வாறு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே எழுத்து வழக்காகவும், பேச்சுவழக்காகவும் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படும் தமிழின் உதயத்திற்கு இம்மண்ணில் வந்துதித்த ஈழத்துச் சான்றோர்களின் சிறப்புக்களை கூறிக்கொண்டே செல்லலாம்.

கத்தரித் தோட்டத்து வெருளியும், ஆடிப்பிறப்புக் கொழுக்கட்டையும் இன்றும் சிறுவர்கள் வாயில் தவழ்கின்றன. **"அதிரவரு மாணிக்க கங்கையும் வண்ணானின் மொழி கேட்டு வனம் விடுத்தச் சீதையை இந்நாளும் தேடுகின்ற குரங்குகளையும் வடதேசத்து முதிர்ந்த அறிஞர்களும் புகழ்கிறார்கள்"** என்று கூறினார் நவாலியூர் திரு.க சோமசுந்தரப்புலவர்.

இவ்வாறாக ஈழத்துச் சான்றோர்கள் பாரிய சொல்வளமும் அழிவில்லாத வாழ்வும் காலத்திற்கேற்ப புதுமையும் வழங்கிச் சிறப்பிற்கு உட்படுத்தப்பட்ட தமிழை அவர்களைப் போல் பின்பற்றி அதை அவர்கள் அளவுக்கு வளர்க்காவிடினும் தாய்த் தமிழை வளர்க்க நாமும் முற்படுவோம். என்றென்றும் நம் தமிழ் வளர்த்த ஈழத்துதச் சான்றோர்களைப் பின்பற்றுவோம்.

***வாழ்க எம் மொழி! வளர்க தமிழ் மொழி .....!***

சவுந்தரராசன் ஜதுஷிகா
யா/பண்டத்தரிப்பு பெ.உ. பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மண் தந்த முல்லை மணியின் நாவல்கள் குறித்த தொகுநிலை ஆய்வு

"முல்லை மணி" எனும் சிறப்புப் புனைபெயரோடு இலக்கியத்துறைக்காகப் பணியாற்றிவர் திரு.வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் *(1933-2016)* அவர்கள். பல்துறை ஆளுமையினரான இவரின் கட்டுரைகள் *(வன்னியர்சிந்தனைகள்-2001,* வன்னியின் கதை *-2016),* சிறுகதைகள் *(அரசிகள் அழிவதில்லை-1977),* மரபுக்கவிதைகள் *(ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பாமாலை -1976* நெடுங்கேணி வில்லையடிப் பிள்ளையார் பாமாலை - *1978,* காவத்தை நிலகாமம் முத்துமாரி திருவூஞ்சல் *-1978),* நாடகம் *(பண்டார வன்னியன்-1970),* நாவல்கள் எனப் பலவற்றை எழுதியுள்ளார். அவற்றில் நாம் குறிப்பாக இவரின் நாவல்கள் பற்றி ஆய்வு செய்வோம்.

முல்லை மணி அவர்கள் ஐந்து நாவல்களைத் தந்துள்ளார் அவையானவை

- பிறந்தமண்
- மல்லிகை வனம்
- வன்னியர் திலகம்
- கமுகஞ்சோலை
- மழைக்கோலம்

என்பனவாகும்

**பிறந்தமண்**

"பிறந்தமண்" எனும் நாவல் வீரகேசரிப் பத்திரிகைக்காக எழுதப்பட்டது. இது முல்லைமணியின் முதல் நாவலாக விளங்குகிறது. 'இந்நாவல் எனது கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது' என முல்லைமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**மல்லிகை வனம்**

"மல்லிகை வனம்" ஒரு சமூக நாவலாக அமைகிறது. முல்லை மண்ணில் பிறந்து வளர்ந்த பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்கள், அவர்களின் விவசாய வாழ்க்கை முறை,அவர்களின் துன்பியல் நிகழ்வுகள், விழாக்கள், கலை - கலாசார - பண்பாட்டு அம்சங்கள், நம்பிக்கைகள் என்பன இந்நாவலின் பின்புலமாக அமைகின்றன.

**வன்னியர் திலகம்**

"வன்னியர் திலகம்" *1988* இல் வெளிவந்த வரலாற்று நாவலாகும். அடங்காப்பற்றின் அரைவாசிப் பிரதேசத்தை உள்ளடக்கியது பனங்காமம் (பழைய பெயர் பாணன்காமம்). இந்த வன்னிமையின் காவலனாக முப்பத்துநான்காண்டுகள் ஆட்சி புரிந்தவர் கயிலை வன்னியன்.

**கமுகஞ்சோலை**

"கமுகஞ்சோலை" எனும் நாவல் *2000*ஆம் ஆண்டில் வெளிவந்தது. முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள நாட்டார் கதைப்பாடலை மையமாகக் கொண்ட வரலாற்று நாவலாக இது அமைகிறது.

**மழைக்கோலம்**

*1960* கால வன்னிப்பிரதேச மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் காட்டும் சமூக மாற்றத்திற்கான வித்துக்கள் தோற்றம் பெற்றதையும், மாற்றத்தை விரும்பாத பழைய தலைமுறையினரின் மனப்பாங்கையும் இந்நாவல் தெளிவாகக் காட்டுகிறது.

முல்லைமணியின் இவ் ஐந்து நாவல்களும் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன. பிரதேச நாவல் இலக்கியத்திற்கான முல்லைமணி அவர்களின் வகிபாகத்தை காட்டுவனவாக விளங்குகின்றன. வன்னியர் சிந்தனைகள், மக்களின் வாழ்வாதார முறைகள், வன்னியின் தனித்துவமான கலை என மண்வாசனை கமழும்படி குறித்த பிரதேசத்தை சித்திரிக்கும் இலக்கிய வடிவமாக இந்நாவல்கள் விளங்குவதைக் காணலாம்.

வஜீனா பாலகிருஷ்ணன்
யா/பண்டத்தரிப்புபெ.உ.பாடசாலை
*(தரம் 13, கலைப்பிரிவு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன; ஒன்று கல்விச்செல்வம் மற்றையது பொருட் செல்வம். பொருட் செல்வம் பிறருக்கு கொடுக்குந்தோறும் குறைவுபடும் நீராலும் நெருப்பாலும் அழியக்கூடியது. பிறரால் கவரக்கூடியது. ஆனால் கல்விச்செல்வமோ அழிவற்றது.

நீராலோ நெருப்பாலோ அழியாதது கள்வரால் களவாட முடியாதது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகிக் கொண்டே செல்லும். இதனால்தான் கல்விச்செல்வத்திற்கு நிகரான செல்வம் வேறில்லை என்று நம் முன்னோர் போற்றினர்.

மனிதரிடத்திலுள்ள அறியாமையைப் போக்கி அறிவொளி ஊட்டுவது கல்வி கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. **"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"** என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று கற்றபடி ஒழுக வேண்டும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"** என்றார் வள்ளுவர். கற்க வேண்டியவற்றைக் கருத்தூன்றிக் கற்க வேண்டும் கற்க வேண்டிய பருவத்தில் கற்க வேண்டும். **"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"** என்னும் முதுமொழியை நாம் மறக்க கூடாது **"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"** எண் என்று சொல்லப்படுவதும் எழுத்து என்று கூறப்படுவதும் இவை இரண்டும் இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு கண் என்பார்கள்.

நாம் இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாரும் இன்பம் அடைவதைக் கண்டு கற்றறிந்தவர் மென்மேலும் தாம் கற்பதையே விரும்புவார்கள்.

அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச்செல்வமே மற்றைய பொன், பொருள், மண் என்னும் செல்வங்கள் ஒருவனுக்குச் சிறந்த செல்வங்கள் ஆகா.

எவ்வித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அழகே சிறந்த அழகாகும். அக் கல்வி அழகினை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் கற்பதற்கு வயது கட்டுப்பாடு இல்லை வாழ்நாள் முழுவதும் கற்கலாம்.

"பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்னும் கூற்றை நாம் மறக்கக் கூடாது. அழியாத செல்வமான கல்விச்செல்வத்தை பெற்று இவ்வையகத்துள் வாழ்வாங்கு வாழ முயற்சிப்போமாக.

ர.கஜேந்தினி (தரம்-10)
யா/பொன்னாலை வ. பெ.வித்தியாலயம்

## *THE FOX AND THE GRAPES*

***A hungry fox once looked everywhere for food. He couldn't find anything until he stumbled upon a farmer's wall. He saw big, purple, juicy grapes. He jumped as high as possible to reach the grapes. No matter how many times he tried, he failed.***



***Finally, he gave up and went home, thinking to himself that the grapes must have been sour anyway.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரத்தொடர்

## மீயோவும் மாலியும்

கடந்தவை
மீயோ -பறக்கும் பூனை
மாலி -நீந்தும் எலி
டயானா -வாத்து

பெனாட்சாய் பெரிய விஞ்ஞானி அவரது மாணவர்கள் ஜஸ்ரின் ராஜ், அலெக்ஸ் முறையே குளோனிங் மூலம் உருவாக்கிய உயிரினங்கள்.

1



டயானாவின் அழகில் மயங்கிய மாலி டயானாவின் முதுகில் ஏறி சவாரி செய்ய விரும்பிக்கேட்டது. மாலியின் செயலால் கோவத்துடன் அதனை தன் முதுகில் ஏற்றியது. டயானாவைப் பார்க்கவும், மீன்களை உண்ணவுமே தான் வருவதாக மாலி சொன்னது.

2



ராணியாக தன்னைக் காட்டிக் கொள்ளும் டயானாவிடம் மாலியின் செயல்கள் பற்றி முறைப்பாடுகள் குவிந்தன டயானா இதற்கு முடிவு கட்ட பெனாட்சாயை அணுக முடிவெடுத்தது.

3



தனது ஒய்வு நேரத்தை டயானாவுடனும் அங்குள்ள நண்டு ,தவளை மீன்களுடன் கழித்திடும் பெனாட்சாய்க்கு மாலியின் வருகை பற்றி டயானா சொன்னதும் ஆர்ச்சயம் அடைந்தார். இதற்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தார்.

4



மாலியின் மினுமினுப்பின் இரகசியம் அறிந்த ஜஸ்ரின் ராஜ் ,தாவர உண்ணியான மீயோவை வைத்து மாலியை பயம் காட்ட எண்ணினான். டயானாவிடம் தனது கண்டுபிடிப்பான மீயோவைப் பற்றி அடுக்கினார். மீயோவும் தனக்கு உதவக்கூடும் என டயானா எண்ணியது சரியா? **என்னாச்சு? காத்திருப்போம்!**

**ஆள்வினையுடைமை**

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர் துன்பம்**
**துடைத்தூன்றும் தூண். (குறள் - 615)**

**கருத்து-** தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளோனிங்

நாட்டை நிர்மூலமாக்கும் அணுஆயுதங்கள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், மனிதனைப் பறக்க வைத்த விமானங்கள், பூமியைத் தாண்டி நிலவில் மனிதனை களமிறக்கிய விண்கலன்கள், திறமைக்கு சவால்விட்ட கணினிகள் என 20-ம் நூற்றாண்டு சாட்சியாக நின்ற அறிவியல் பாய்ச்சல்கள் ஏராளம். இவற்றுள் ஆக்கசக்திகளும் உண்டு; அழிவு சக்திகளும் உண்டு. ஆனால் 1997, பிப்ரவரி 22-ம் தேதி கிடைத்த புதிய தொழில்நுட்பத்தின் பெயர் குளோனிங்.

உயிரணுக்களின் மூலக்கூறுகளில் ஒன்றான டி.என்.ஏ.(DNA) குளோனிங் என்பது மூலக்கூற்று குளோனிங் *(Molecular cloning)* எனப்படும்.

உயிரணுக்களின் குளோனிங் என்பது உயிரணு குளோனிங்*(cell cloning)* எனப்படும்.தனிக் கலங்களாகவன்றி உயிரணுக் கூட்டங்களாக, அதாவது இழையங்களாகவும் குளோனிங் செய்யப்படும்.

குளோனிங் மூலம் ஒரு உயிரினத்தின் புதிய தனியன்களை உருவாக்குதல் *( Creation of new individuals of an organism by cloning).*

**குளோனிங் என்றால் என்ன?**

குளோனிங் என்பது செயற்கையான முறையில் ஒரு உயிரை போன்று மற்றொரு உயிரை உருவாக்குவதாகும். குளோனிங் முறைக்கு அடிப்படை, கலவியில்லா இனப்பெருக்கம். உலகில் குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட முதல் விலங்கு செம்மறி ஆடு ஆகும். குளோனிங் தொழில்நுட்பம் மூலம் இதுவரை பூனை, நாய், எலி, குரங்கு உள்ளிட்டவை உருவாக்கப்பட்டுள்ளன. மனிதர்களை குளோனிங் முறையில் உருவாக்க பல நாடுகளில் தடைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

குளோனிங்- இந்த தொழில்நுட்பத்தின் மூலம் முதன்முதலாக பிறந்த உயிரினம்தான் டாலி; அதுஸ்கொட்லான்ட் Midlothian, Scotland பிறந்த ஓர் செம்மறிஆடு.

ஆனால், டாலி ஓராண்டு முன்னராக 1996-ம் ஆண்டு ஜூலை மாதமே பிறந்துவிட்டது. காப்புரிமை தொடர்பான பணிகளினால் தாமதம் ஏற்பட்டது. துரதிருஷ்டவசமாக 7 வயதை எட்டுவதற்கு முன்பாகவே அது மரணமடைந்தது. (ஒரு செம்மறி ஆட்டின் சராசரி ஆயுட்காலம் 12 ஆண்டுகள்.)



ஒரு ஆட்டை குளோனிங் செய்ய வேண்டுமென்றால் முதலில் அதன் உடல்செல்களைச் சேகரிப்பார்கள். பின்னர் வேறொரு ஆட்டிலிருந்து கருமுட்டைகளை எடுத்து, அதற்குள் இருக்கும் டி.என்.ஏ.வை (DNA) நீக்கி அந்த கருமுட்டைக்குள் குளோனிங் செய்யப்பட வேண்டிய ஆட்டின் செல்லை உள்ளே செலுத்துவார்கள். அதனை வேதியியல் மாற்றங்களுக்கு உட்படுத்தி, கருமுட்டையை கருவுறச் செய்வார்கள். பின்னர் கருவுற்ற இந்த முட்டையை இன்னொரு பெண் ஆட்டின் கருப்பைக்குள் வைத்துவிடுவார்கள். அந்த ஆடு இயற்கையாக கருவுற்று பின்னர் புதிய ஆட்டைப் பிரசவிக்கும்.

தொடரும்.....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்து போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | ■ | 5 |
| | ■ | | ■ | 6 | | ■ | |
| | ■ | ■ | 7 | | | 8 | ■ |
| 9 | | 10 | | ■ | 11 | | 12 |
| ■ | ■ | 13 | | | | | |
| ■ | 14 | ■ | | ■ | | ■ | |
| 15 | | 16 | | | | ■ | |
| ■ | 17 | | ■ | ■ | ■ | 18 | ■ |

**இடமிருந்து வலம்**

*1.* சமய குரவர்கள் நால்வருள் ஒருவர்.

*6.*சமயம் என்பதைக் குறிக்கும். (கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.)

*7.*தோசை,புட்டு என்பவற்றுடன் சேர்த்து உண்ணப்படும் ஒரு பதார்த்தம்.

*9.*கோபம் என்று சொல்வர். (இங்கு முதல் எழுத்து விடுபட்டு வலமிருந்து இடமாக வருகிறது).

*11.*இது புரிந்தவர்களை எல்லோரும் பாராட்டுவார்கள்.

*13.*கொள்கை விளக்க அறிக்கையை குறிக்கும். (இங்கு குழம்பியுள்ளது).

*15.*ஒன்பது வகை சத்தான தானியம். (இங்கு குழம்பியுள்ளது).

*17.* உடுக்கை வாத்தியத்தைக் குறிக்கும்.

*18.* பாட்டு என்பதன் சுருக்கச் சொல்.

**மேலிருந்து கீழ்**

*1.* சுறுசுறுப்புக்கு எதிரானது.

*2.*கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளப் பயன்படுவது.

*3.*விவசாயம் என்பதைக் குறிக்கும்.

*4.*பழனி ஆண்டவர் பிரசாதம். (இங்கு குழம்பியுள்ளது).

*5.* உடல் உறுப்புக்களில் பிரதானமானது.(இங்கு கீழிருந்து மேலாக வருகிறது).

*7.*உண்மை என்பதைக் குறிக்கும்.(இங்கு குழம்பியுள்ளது).

*8.*மங்கள வாத்தியங்களில் ஒன்று.(இங்கு குழம்பியுள்ளது).

*10.*நாள் என்பதைக் குறிக்கும்.(கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.)

*12.*புனைந்துரை என்றும் கூறுவர்.(இங்கு கீழிருந்து மேலாக வருகிறது).

*14.*பொருள் என்பதைக் குறிக்கும். (இங்கு குழம்பியுள்ளது).

*16.*பொதுவாக ஆண்கள் முகத்தில் வளரும் முடியைக் குறிக்கும்.

**சரியான விடையளித்தவர்களின் 03 பேர் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.**

**1ம் பரிசு -ரூ.1000**

**2ம் பரிசு - ரூ.500**

**3ம் பரிசு - ரூ.300**

**உங்களது விடைகளை சத்தியமனை நூலகத்தில் ஒப்படைக்கவும்.விடைகளை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி -01.01.2024**

**ஆக்கம் :- மதன்**

---

## இதழ் 01 ற்கான குறுக்கெழுத்து போட்டியின் பதில்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மு | ன் | ப | ள் | ளி | ■ | ■ | ப | ல் | லி |
| க | ர | ■ | ■ | ப | ண | ம் | ■ | லி | கா |
| ம் | அ | ■ | ■ | ங் | ■ | ரு | றொ | ம | ற் |
| ■ | ■ | ■ | ■ | கா | ப் | பு | ■ | ■ | நா |
| ஓ | சை | த் | தா | ■ | த | வி | டு | லை | ■ |
| று | ■ | ல் | தி | கா | ■ | ■ | ■ | ■ | ந |
| ன் | மை | ப | ■ | வ | ணை | த | ல் | ■ | டு |
| ■ | ■ | தி | ரு | டி | ■ | ம் | ள | ள் | வ |
| ல் | று | ஆ | த | ■ | ற | க | ள் | ■ | கு |
| ஜெ | ■ | ■ | மி | ன் | ■ | ன | வ | ■ | டு |

**பரிசு பெற்றோர்**

**1ம் பரிசு:- ஜெயச்சந்திரன் தயிந்தன்**

(யா/ ப.மெ.ம.வித்தியாலயம்) ரூபா 1000/-

**2ம் பரிசு :- கணேஸ்வரன் ருவின்சன்**

(யா/ வட்டு இந்துக்கல்லூரி) ரூபா 500/-

**3ம் பரிசு :- ரங்கநாதன் கிஷானி**

(யா/ வட்டு இந்துக்கல்லூரி) ரூபா 300/-

**சரியான விடையளித்தவர்களின் சில தெரிவுகள் விபரம்.**

1.அபிநயா செந்தில்வேல் (யா/வட்டு இந்துக் கல்லூரி)

2.நிலுக்சன் (யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை)

3.அ.கோபிகா (யா/வட்டு இந்துக் கல்லூரி)

4.சோபிகா இலங்கேஸ்வரன் (யா/வட்டு இந்துக் கல்லூரி)

5.M நிரோஜன் (யா/வட்டு இந்துக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUDOKU

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 2 | | | 6 | | | |
| 1 | 6 | | 9 | | | | | 4 |
| | 4 | 9 | 8 | | 3 | 6 | 2 | |
| 4 | | | | | | 8 | | |
| | 8 | 3 | 2 | | 1 | 5 | 9 | |
| | | 1 | | | | | | 2 |
| | 9 | 7 | 3 | | 5 | 2 | 4 | |
| 2 | | | | | 9 | | 5 | 6 |
| | | | 1 | | | 9 | 7 | |

## விடை

(தலைகீழாக உள்ளது)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 2 | 4 | 7 | 6 | 1 | 8 | 9 |
| 1 | 6 | 8 | 9 | 5 | 2 | 7 | 3 | 4 |
| 7 | 4 | 9 | 8 | 1 | 3 | 6 | 2 | 5 |
| 4 | 2 | 5 | 6 | 9 | 7 | 8 | 1 | 3 |
| 6 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 | 9 | 7 |
| 9 | 7 | 1 | 5 | 3 | 8 | 4 | 6 | 2 |
| 8 | 9 | 7 | 3 | 6 | 5 | 2 | 4 | 1 |
| 2 | 1 | 4 | 7 | 8 | 9 | 3 | 5 | 6 |
| 5 | 3 | 6 | 1 | 2 | 4 | 9 | 7 | 8 |

## கடி

பசு மாடு ஏன் தெரியுமா பால் தருகுது?

ஏன்னா அதால டீ காபி தரமுடியாது தானே



ஏய் மாட்டு லோன் தந்தா கட்டுவியா?

நீங்க இப்படி சொல்லுவீங்க என்றுதான் கயிறுடன் வந்தேன்.

## ஆறு வித்தியாசங்களை கண்டு பிடிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தால் மழை பெய்கிறதா? மழையால் மரம் வளர்கிறதா?

**ரவி ரித்விக்**

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம், மரம் இல்லையேல் மனிதன் இல்லை, மரங்களை அழிப்பதனால் தான் மழை இல்லை இப்படியான நிறைய வாசகங்களை நாம் அறிந்திருப்போம்.

இன்று நாம் மழை வருவதால் மரம் வளர்கிறதா, மரம் வளர்ப்பதால் மழை பெய்கிறதா என்று பார்ப்போம்.

ஒவ்வொரு மரத்திலும் இலைகள் இருக்கும் அவற்றில் கண்களுக்குத் தெரியாத நுணுக்குக் காட்டியால் மட்டும் பார்க்கக் கூடிய நுண்துளைகள் காணப்படும்.

அந்த நுண் துளைகள் மூலம்தான் மரம் தனக்குத் தேவையான வாயுக்களை கிரகித்துச் சுழற்சி முறைகளில் வெளியேற்றுகிறது.

இலைகளின் துளைகள் மரம் சுவாசிக்க மட்டுமல்ல வியர்வையை வெளியேற்றவும் பயன்படும். இப்பொழுது உங்களுக்கு ஒரு கேள்வி எழுந்திருக்கும் அல்லவா, ஆம் மரங்களுக்கும் வியர்க்கும்.

மரங்கள் உறிஞ்சும் நீர்ச் சத்துக்களில் தன் ஆற்றல் தேவைக்குத் தகுந்தாற் போல் பயன்படுத்திக் கொண்டு மீதமாகும் நீரை இலைகளின் துளைகள் மூலம் சிறிது சிறிதாக வெளியேறிவிடும்.

அப்படி வெளியேறும் நீர் வளி மண்டலத்தில் கலந்து ஈரப்பதனை அதிகப்படுத்துகிறது. அந்த ஈரப்பதத்தை உறிஞ்சும் மேகங்கள் தான் மீண்டும் மழையாகப் பெய்கின்றது. ஆனால் இந்தச் செய்முறை மழையாக மாற எல்லாப் பக்கமும் மரங்களை நட்டால் மட்டும் போதாது.

மரங்கள் மழை தர வேண்டுமானால் காடு அவசியம். ஒரு மரம் சுமார் ஒரு நாளைக்கு *300 L* தண்ணீரை வியர்வையாக வெளியேற்றுகிறது. ஒருமரமே இவ்வளோ லிட்டர் என்றால் நினைத்துப் பாருங்கள் ஒரு காட்டில் இருக்கும் மரங்களின் வியர்வை அந்த சூழலை எவ்வாறு குளிர்மைப்படுத்தும். இதுதான் அமேசான் காடுகளில் நிகழ்கிறது மரக்கூட்டங்கள் வெளியிடும் நீரைச் சேமித்து வைக்க முடியாமல் மேகங்கள் நினைத்த நேரமெல்லாம் நீரை கொட்டித் தீர்க்கிறது.

மரங்கள் எப்போதும் தனக்குத் தேவையான நீரை விட பல மடங்கு நீரை உறிஞ்சிக் கொள்ளும். ஒரு மரம் *10,000 L* நீரை உறிஞ்சினால் அதற்கு தேவையான நீரின் அளவு ஆயிரம் முதல் இரண்டாயிரமாக இருக்கும் ஏனைய *8000 L* காற்றுக்கு கொடையளித்து விடுகிறது. அந்த உபரி நீரைக் கொண்டுதான் மேகங்களும் மழையை நமக்கு கொடுக்கிறது.

மழை வேண்டுமென்றால் மரம் வளர்ப்பதைவிட காடுகளை வளருங்கள்.

**காடுகளை வளர்ப்போம் மழை பெறுவோம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபொறி

அழகான காகிதத்தில்
அச்சிட்ட சிறுபொறி
காலாண்டு தோறும் வருகுது
நல்ல செய்தி தருகுது

அனல் பறக்கும் செய்திகளை
அற்புதமாய் தருகுது
மாணவர்களுடையத் திறமையை
மாண்புடனே விளக்குது

காலாண்டு வரும் இவ்விதழ்கள்
நல்ல வழி காட்டுது
இவ்விதழை வாசிப்பதால்
நமது அறிவு பெருகுது

சத்தியமனை நூலகத்தால்
வெளிவருது இவ்விதழ்
சாதனையாளர்கள் பலரையும்
உருவாக்குது இவ்விதழ்

சிவகுமாரன் சுபஹரி(தரம் -7)
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்



ஆதித்தன் - ரணேஸ் (ஆதி) இந்தத் தடவை க.பொ.த உயர்தர விஞ்ஞானப்பிரிவில், *3A*களை யாழ் பரியோவான் கல்லூரியில் பெற்றுருக்கிறார். மாவட்ட ரீதியில் 7ம் இடமும். அகில இலங்கையில் *90* வது இடத்தையும் பெற்றிருக்கிறார்.

எம் 'சிறுபொறி' முதலாம் இதழில் 'எளிமைப் பௌதீகம்' என்ற தொடரை எழுதத் தொடங்கியுள்ளார். அதுமட்டுமல்ல கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தின் அங்கத்தினராக இருந்து அதன் வளர்ச்சியுடனும் இணைந்திருக்கிறார்.

ரணேஸ் ஆதித்தன் ஐந்தாம் ஆண்டில் வவுனியா மகா வித்தியாலயத்தில் *191* புலமைப்பரிசில் புள்ளிகளை பெற்றிருந்தார். பின் யாழ் பரியோவான் கல்லூரியில் ஒன்பது பாடங்களிலும் *'A'* பெற்றிருந்தார். அவரது சாதனை எம்மைப் பெருமை கொள்ள வைக்கிறது. சமூக நலனை முன்னிறுத்தும் மருத்துவராகிப் பல சாதனைகளைத் தொடர்க என வாழ்த்துகிறோம்!

## நெப்பந்தீசு பூ அமைப்பு

கெண்டி அல்லது நெப்பந்திசு *(Nepenthes)* அல்லது குடுவையுருத்தாவரம் எனப்படுவது நெப்பந்தேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பூச்சியுண்ணும் தாவரமாகும்.

இவை தொங்கும் குடுவைகள் *(Hanging Pitcher Plant)* என்றும் அழைக்கப்படுகின்றன. நெப்பந்தீசுத் தாவர வகையில் ஆண், பெண் என இரு வகைகள் உள்ளன. இவற்றின் பூக்கள் ஒழுங்கானவை. 'ரசீம்' எனும் வளர்நுனி மஞ்சரிகளாக அமைந்திருக்கும். விதைகள் *100* முதல் *500* வரை இருக்கும்.



நெப்பந்தீசு இனத்தில் சுமார் *70* வகைச் செடிகளும் பத்துக்கும் மேற்பட்ட கலப்பினச் செடிகளும் உள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமைப் பௌதிகம்

ரணேஷ் ஆதித்தன்

***(உயர்தர பௌதிகவியல் பாட பரீட்சையில் பகுதி-IIA பகுதியான அமைப்புக் கட்டுரை வினாக்கள் பற்றிய விளக்கம் -பொறி-01 இன் தொடர்ச்சி)***

வினா - *II*

இங்கு பெரும்பாலும்
அலகு *IV* => வெப்பப் பௌதிகவியலை சேர்ந்த பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்ட வினாக்களே அமைக்கப்படும்.

இங்கு அலகு *IV* இனைச் சேர்ந்த

செய்முறை *22* =>குவில் குழாயைப் பயன் படுத்தி வளிமண்டல அமுக்கத்தை துணிதல்

செய்முறை *23* => மாறா அமுக்கத்தில் வாயு ஒன்றின் வெப்ப நிலைக்கும், கனவளவுக்கும் இடையிலான தொடர்பை வாய்ப்புப் பார்த்தல்

செய்முறை *24* => மாறாக் கனவளவில் வாயு ஒன்றின் அமுக்கத்திற்கும், வெப்ப நிலைக்கும் இடையிலான தொடர்பை வாய்ப்புப் பார்த்தல்

செய்முறை *25* => கலவை முறையில் திண்மப் பொருளொன்றின் தன் வெப்பக் கொள்ளளவு துணிதல்

செய்முறை *26* => குளிரல் முறையில் திரவமொன்றின் தன் வெப்பக்கொள்ளளவு துணிதல்

செய்முறை *27* => கலவை முறையில் பனிக்கட்டியின் உருகலின் மறை வெப்பம் துணிதல்

செய்முறை *28* => கலவை முறையில் நீரின் ஆவியாதலின் தன் மறை வெப்பம் துணிதல்

செய்முறை *29* => மினுக்கிய கலோரிமானியைக் கொண்டு வளியின் சாரீரப்பதனைத் துணிதல்

செய்முறை *30* => சேளின் முறை மூலம் உலோகமொன்றின் வெப்பக்கடத்தாறைத் துணிதல்

ஆகிய *9* செய்முறைகளில் யாதாயினும் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே பொதுவாக வினா *II* கட்டமைக்கப்படும். ஆகவே இவ்வொன்பது செய்முறைகளையும் கற்றல் கட்டாயமானதாகும்.

கடந்த *10* வருடங்களில் வினா *II* பற்றிய தரவுகள் தரப்பட்டுள்ளன.

| வருடம் | அலகு | செயன்முறை இலக்கம் |
|---|---|---|
| 2022 | IV | 28 |
| 2021 | IV | 29 |
| 2020 | IV | 22 |
| 2019 | IV | 30 |
| 2018 | IV | 23 |
| 2017 | IV | 26 |
| 2016 | IV | 29 |
| 2015 | IV | 24 |
| 2014 | IV | 28 |
| 2013 | IV | நீளவிரிவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட, சும்மா அதிருதில்ல?!

ஜோர்ஜ் மாமா

**ஓராயிரம் பார்வையிலே, உன்னை நான் அறிவேன்!**

ஓராயிரம் விடயங்களைச் சொல்லி உங்களைக் குழப்பக் கூடாது. ஒரே ஒரு விடயம் உங்களுக்குச் சொல்ல வேண்டும்!

ஆலயம் பதினாயிரம் நாட்டலை விட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதால் புண்ணியம் கோடி என்று பாரதியார் சொல்லியிருக்கிறார்.

ஊருக்குள்ள உந்த வெளிநாட்டுக்காரர், ஒழுங்கைக்கு ஒழுங்கை பதினாயிரம் கால் மண்டபக் கோயில் கட்டி, கும்பாபிசேகம் செய்யிறதை நீங்களும் தான் கண்டிருப்பியள்.

அதை விட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தால், புண்ணியம் நிறையச் சேர்ந்திருக்கும். அது கிடக்கட்டும்.

நான் சொல்ல வந்த அந்த ஒரு விடயம்...

'ஒரு' விடயம் தான். தமிழில் ஒன்று என்ற கருத்தைத் தரும் ஒரு, ஓர் என்ற இரண்டு சொற்களையும் எங்கே பயன்படுத்துவது என்பது பற்றிப் பெரும் மயக்கங்கள் உண்டு.

இந்த ஒரு, ஓர் இரண்டையும் பயன்படுத்துவது பற்றி இலக்கண விதிகள் இருக்கின்றன.

தமிழில் பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் உள்ளன. **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஃ**

இந்த எழுத்துக்களில் தொடங்கும், எண்ணக் கூடிய பொருட்களைக் குறிக்கும் பெயர்ச்சொற்களின் (*Countable Noun* என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்) முன்னால், ஒன்று என்பதைக் குறிப்பிட, ஓர் பயன்படுத்தப்படுகிறது.

**ஓரங்க நாடகம்.**
**ஓராயிரம் சிந்தனை, நூறாயிரம் கற்பனை.**
**ஓரிரவு.**
**ஓர் ஈட்டி.**
**ஆங்கோர் ஏழை. ஆங்கு ஓர் ஏழை.**




இப்படி உயிர் எழுத்தில் தொடங்கும் எண்ணக்கூடிய பெயர்ச்சொற்களின் முன்னால் ஓர் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மெய்யெழுத்துக்களில் தொடங்கும் எண்ணக்கூடிய பெயர்ச்சொற்களின் முன்னால் ஒரு என்பது வரும். ஒரு வானவில் போலே, என் வாழ்விலே வந்தாய்.
ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன், நிலவில் ஒளியில்லை.

ஹ்ம்.. அதெல்லாம் ஒரு கனாக்காலம்!

இதென்ன புது விதி என்று நீங்கள் எரிச்சல் அடையக் கூடும். அதுவும் சட்டங்கள், விதிகள் என்றவுடனேயே, அதை எப்படி மீறுவது என்பதில் சிந்திக்கத் தொடங்கும். மத்திம மேதாவிகள் மாதிரி நீங்களும் இருந்தால், உங்களுக்கும் அந்தச் சிந்தனை தான் வரும்.
'உங்க எல்லாரும் செய்யினம் தானே, நாங்களும் அப்படித் தானே செய்ய வேணும்!?' என்று, ஊரோடு ஒத்தோடும் பழக்கம் உடனே தோன்றும். சட்டங்கள், விதிகள் எல்லாமே நாங்கள் சமூகமாக உரிமைகளோடு வாழ இயற்றப்படுகிறவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை நாங்கள் கடைப்பிடித்தால் தான் எல்லாருக்கும் சமமான சமூக நீதி கிடைக்கும். 'எல்லாரும் செய்யினம் தானே!?' என்று நாங்களும் செய்தால் அது ஒரு மந்தைச் சிந்தனை.

எல்லாரும் எப்போதும் உயிர் எழுத்துக்களின் முன்னால் ஓர் பயன்படுத்துவதில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. எல்லாருக்கும் விதி தெரிந்திருப்பதில்லை என்பதை விட! விதியை மீறுவதற்கு முன்னால், விதியின் நோக்கத்தை அறிந்து கொண்டோம் என்றால், மீறுவதற்கான நியாயங்கள் வரும்போது அதை மீற முடியும்.

இதனால் ஒரு, ஓர் வித்தியாசம் கூட எப்போதும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. பலர் 'ஓர்' என்பதைப் பயன்படுத்தாமல், எல்லாவற்றுக்கும் அந்த 'ஒரு'வை வைத்தே சிலாவி அடிப்பார்கள். அதற்கு காரணம் உண்டு.

மொழி முதலில் பேச்சுவழக்காகத் தான் ஆரம்பித்தது. எழுத்து வடிவம் பின்னால் வந்தது. பேசும்போது எவ்வாறு பேசுகிறோமோ, அதை எழுத்தில் பதிவு செய்கிறோம். எழுத்தை விட, ஓசை தான் முக்கியமாக இந்த வேறுபாட்டை முடிவு செய்கிறது. வேகமாகப் பேசும்போது, ஒரு ஆயிரம் என்பதைவிட, ஓராயிரம் இலகுவானது.

ஓர் கனாக்காலம் என்பதைவிட, ஒரு கனாக்காலம் சொல்வதற்கு இலகுவானது. மெய்யெழுத்துப் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் 'ஒரு' பயன்படுத்துவது சொல்ல இலகுவானது. அவற்றின் முன் 'ஓர்' பயன்படுத்துவதில்ல.

உயிர் எழுத்துப் பெயர்ச் சொற்களின் முன்னால் தான் இத்தனை குழப்பமும்.

அவற்றின் முன்னால், 'ஓர்' பயன்படுத்தப்பட வேண்டும் என்றாலும், ஒலியின் அடிப்படையில் அது பொருத்தமானதாகவும் இருப்பது இல்லை. ஒரு ஆயிரம் ரூபா கடனா எடுக்கலாமோ? என்பதற்குப் பதிலாக 'ஓராயிரம் ரூபா' என்று சொன்னால் தான் கடன் தருவோம் என்று யாரும் சொல்வதில்லை. அதிலும் திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று தெரிந்தும் கடன் வாங்குகிறவர்கள் அதிகம். வட்டிக்கு கொடுப்பவர்களுக்கு அதெல்லாம் பிரச்சனை இல்லை என்பது வேறு கதை.

எனவே, உயிர் எழுத்து என்பதை விட, உயிர் ஓசை என்பது தான் இங்கே முக்கியமானது. அதை இலகுவாகக் கண்டுபிடிப்பதற்கான வழி, அதை வேகமாகச் சொல்வதோ, பாட்டாகப் பாட முயற்சிப்பதோ தான். பேசும் போது 'ஒரு ஆயிரம் ரூபா' என்று சொல்வதும், பாடும் போது 'ஓராயிரம் பார்வையிலே' என்று பாடுவதும் இதனால் தான்.

இப்படி, விதிகளை மீறி எழுதினால் யாரும் உங்களைப் பிடித்துக் கொண்டு போய், மின்கம்பத்தில் கட்டி மரண தண்டனை தரப் போவதில்லை. அந்தக்காலம் எல்லாம் முடிந்து விட்டது. இது சுதந்திரமாகக் சிந்திக்கும் காலம். விதிகள் வழி காட்டத்தான். அவை கை விலங்குகளாக இருக்கக் கூடாது.

அந்த 'ஒரு', 'ஓர்' போலத் தான், தமிழில் இரண்டு என்பதற்குப் பயன்படுத்தும் 'இரு', 'ஈர்' என்ற சொற்களும். அவையும் இதே உயிர் எழுத்து, மெய் எழுத்துகள் பற்றிய விதிகளில் அடங்குகிறவை. இரு புறமும். ஈர் உருளி. இரண்டு சக்கரம் கொண்ட சைக்கிள். இங்கேயும் பேசுவதற்கும் பாடுவதற்கும் எது இலகுவானதோ அதைப் பயன்படுத்தலாம்.

சரி, இதெல்லாம் எதற்காக?

**ஆங்கிலத்தில் ஒரு, ஓர் என்பதைக் குறிக்கும் *a*, *an* ஆகிய சொற்களை எப்படிப் பாவிப்பது என்ற விதிகளை அடுத்த முறை சொல்லித் தருவதற்காகத் தான்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.ஏ.எஸ் சத்தியமனை நூலகத்தினால் பரிந்துரைக்கப்படும் இவ் இதழுக்கான நூல்கள்

## திருக்குறளின் கல்விச் சிந்தனை சமூக நோக்கில் ஒரு மறுவாசிப்பு

ந.இரவீந்திரன்

*(வெளியீடு- விஞ்சு & வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் முதல் பதிப்பு -2009 ) (தட்டு- DIII-11)*

முனைவர் திரு.நடேசன் இரவீந்திரன் அவர்கள் **"திருக்குறளின் கல்விச் சிந்தனை "** என்னும் இந் நூலில் திருவள்ளுவர் காலத்தைய கல்விச்சிந்தனைகளைத் திருக்குறள் கொண்டும் பிறநூல்களைக் கொண்டும் நிரல்பட ஆய்வு செய்து விபரித்துள்ளார்



கல்வியியல் தேடலில் தமிழர்தம். கருத்தியல் கோட்பாடுகளையும் நன்கு விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளில் இன்றைய கல்வியியலாளர். கூறும் அடிப்படைக் கல்விச் சிந்தனைகள் அனைத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளமை வியப்பைத் தருகின்றது. **"திருக்குறளின் கல்விச் சிந்தனை"** என்னும் இந்நூல் திருக்குறள் ஆராய்ச்சி வரலாற்றில் ஒரு புதுவரவு. திருக்குறளின் பொதுமைச் சிந்தனையையும் புதுமைச் சிந்தனையையும் ஒரு சேரப்புலப்படுத்தும் ஆய்வுநூல்

## மரியாதை ராமன் கதைகள்

தே.வீரபத்திர செட்டியார்.

*( வெளியீடு அமராவதி முதல் பதிப்பு 2010) (தட்டு- Z )*



'உலகப் புகழ்பெற்ற நீதிக் கதைகள்' நம் கலாசாரத்தின் காலக் கண்ணாடி. 60 ஆண்டுகளுக்கு முன்பு தே.வீரபத்திர செட்டியார் மணிப்பிரவாள நடையில் எழுதியுள்ள இந்நூல் படிப்பவர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தை வழங்கும் என்பது நிச்சயம்! படித்து இன்புறுங்கள்!

## மருத்துவ கலைச்சொல் களஞ்சியம்

மணவை முஸ்தபா

*(வெளியீடு karis offset printers முதல் பதிப்பு 1996 ) (தட்டு- CIII-3)*



**"அகராதி,களஞ்சியம்"** தன்மைகள் ஒருங்கிணைந்து புது வடிவெடுத்துள்ள இந்நூல், தமிழில் மட்டுமல்லாது இந்தியா மொழிகளிலேயே முதலாவதாக வெளிவந்துள்ள 'மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்' என்ற சிறப்பைப் பெறுகின்றது. மேலும், இந்நூல் தமிழில் பல மருத்துவ நூல்கள் வெளி வர துணைநிற்கும் அடித்தள நூலாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROOTS

Alex Haley's

(publish Vintage First edition 1991 ) (Bookshelf-Av-46)




The extraordinary account of Alex Haley's twelve-year search for his family's origins.

Tracing his ancestry through six generation-slaves and freedman,- farmers and blacksmiths,lawyers and architects-back to africa,he discovered a sixteen-year-old youth,Kunta Kinte.If was this young man, Who had been torn from his homeland and in torment and in torment and anguish brought to the slave markets of the new world,who held the key to Haley's deep and distant past.

'Roots is a study of continuities,of consequences, of how a people perpetuate themselves,How each generation helps to doom,or helps to liberate,the coming one' NEW YORK TIMES

# விடா முயற்சி வெற்றி தரும்

ஒரு ஊரில் பொன்னன் என்பவரும் முத்தன் என்பவரும் இருந்தார்கள். இருவரும் விவசாயிகள்.

ஒரு நாள் கனத்த மழை பெய்தது. அதனால் அவர்கள் விளைச்சல் நாசமாய்ப் போனது. முத்தன் சொன்னார் நண்பா நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு விளைவித்த விளைச் சல்கள் அனைத்தும் மழையால் வீணாகிப் போய்விட்டது. இனி நாம் என்ன செய்யப்போகிறோம் என்று புலம்பினான். பொன்னனோ புலம்ப வில்லை.

விடாமுயற்சி வெற்றி தரும் என்று நினைத்துக் கொண்டு மீண்டும் முயற்சி செய்வோம் என்று கூறி நண்பனுடன் சேர்ந்து பயிர் விதைத்தார்கள்.

இந்முறை அதை விட நல்ல விளைச்சல் கிடைத்தது. முத்தன் பொன்னனுக்கு நன்றி கூறினான். நண்பா நீ மட்டும் அறிவுரை கூறவில்லை என்றால் நான் பெரும் கஷ்டப்பட்டிருப்பேன் என்றான். பொன்னனோ சிரித்துக்கொண்டு விடாமுயற்சி வெற்றி தரும் என்று கூறினான். இருவரும் சந்தோசமாக அறுவடை செய் தார்கள்.

செ. நித்தியானந்தி (தரம் 03)
யா/ப.மெ.ம.வித்தியாலயம்.

**எமது பிரதேசத்தில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையடைந்த மாணவர்களின் விபரம் - 2023**

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் -10
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் - 08
யா/ சில்லாலை றோ.க.த.க.பாடசாலை - 05
யா/காட்டுப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - 02
யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம் - 02
யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை - 02
யா/ தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம் - 02
யா/மூளாய் அ.மி.த.க பாடசாலை - 01
யா/தொல்புரம் அ.மி.த.க பாடசாலை - 01
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை - 01

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org